223465

# கிராமஊழியன்

1924 ஜூலை-ஆகஸ்ட்

JL
Y31mN27GR
N24.1.7
223465

Regd. No. M.1930. வந்தேமாதரம். Annual Subscription Rs. 2.

# கிராமானுகூலன்

# GRAMANUKOOLAN.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

பத்தகம். 1. | 1924-ளு ஜூலை—ஆகஸ்டுமீ ரக்தாக்ஷிளு ஆடி மீ | ஸஞ்சிகை. 7.

3 - NOV 1924

சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு வருஷ சந்தா (தபாற்கூலி உள்பட) ... ரூ. 2—0—0.
வெளிநாடுகளுக்கு ,, ... ரூ. 2—8—0.
தனிப்பிரதி ... ரூ. 0—3—0.

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வெள்ளச்சேதம் —(பத்திராதிபர்) | 149 |
| 2. | கதர் ,, ... | 150 |
| 3. | கிராம உத்தியோகஸ்தர்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் ,, ... | 151 |
| 4. | கிராம உத்தியோகஸ்தர்களும் கடுதாசிசப்ளையும் ... | 151 |
| 5. | அம்மங்குடி கிராமப்பாய்வாய்க்கால் ,, ... | 152 |
| 6. | கிராமாந்திரங்களில் ஆஸ்பத்திரிகள் ,, ... | 152 |
| 7. | தற்கால நிலைமை (ஓர் சம்பாஷணை.) ,, ... | 153 |
| 8 | கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம் (ஸ்ரீமான் எஸ். நாராயணசாமி ஐயர், மிலட்டூர்) ... | 156 |
| 9. | தற்காலக் கல்வி— (ஸ்ரீமான். ஜி. எம். இராமஸ்வாமி ஐயர், புத்தகரம்)... | 157 |
| 10. | தென் இந்தியக் கோயில்கள்— (ஸ்ரீமான். பி. வி. ஜெகதீச ஐயர், சென்னை) ... | 161 |
| 11. | பாங்குகளின் முறையும் அவைகளின் உபயோகமும்— (ஒரு பாங்க் காஷியர்) ... | 165 |
| 12. | ராணா பிரதாபசிம்மன் அல்லது ரஜபுத்திர தேசபக்தி— (ஸ்ரீமான் எஸ். மகாலிங்க சர்மா.) ... | 167 |
| 13. | விளம்பரங்கள் | 169–172 |


விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு (2 காலம்) ஒரு 1-க்கு ரூ. 10 } காலம் ½-க்கு ஒரு 1-க்கு ரூ. 2-8-0
பக்கம் ½-க்கு (1 காலம்) ,, 5. } இஞ்சு 1-க்கு ,, அணா 8.
நீடித்த விளம்பரங்களுக்கு நேரில் ஏற்பாடு செய்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்,—கும்பகோணம்.

# கி ரா ம ா னு கூ ல ன்.

## சந்தா விவரம்.

| | |
|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. | 50- 0—0. |
| அபிமானிகளுக்கு ,, ... | 15—0—0. |
| ஜீவிய சந்தா ... | 25- 0—0. |
| வருட சந்தா(இந்தியா, பர்மா, சிலோன்.) ... | 2- 0—0. |
| அயல்நாடுகளுக்கு(சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் நேட்டால்) .... | 2—8 0. |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும் ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


## மனையடி சாஸ்திரம்

சௌக்கியமாகவும் சம்பத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், கிரந்தம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் உள்ளவைகளை தமிழில் எளியவசன நடையில் புலிவலம் ஆர். கோபால அய்யரால் எழுதப்பட்டது மேற்படி 1-ம்பாகம் விலை ரூபா 1. மேற்படி 2-ம பாகம் அணா 9. குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8. கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

ஆர், கோபாலய்யர்,
புலிவலம்
விஜயபுரம் போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

## முக்கிய புஸ்தகங்கள்,

தமிழ்.

| | | |
|---|---|---|
| புராதன இந்தியா' (56 தேச விருத்தாந்தம்.) | 1 | 8 |
| விரதங்கள்' (இரண்டு பாகம்) | 1 | 0 |
| இராஜராஜ சோழன் சரித்திரம் | 0 | 8 |
| பாக சாஸ்திரம் | 0 | 8 |

வைத்தினாதன் பிரதர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

## சிற்றின்ப சாஸ்திரம்.

பிரசித்தி பெற்ற அருமையான இந்நூலில் ஸ்திரீ புருஷர், இவ்வுலகில் அனுபவிக்க வேண்டிய சிற்றின்ப ரகசியங்கள், ஸ்திரீகளின் பருவப்பெயர்கள், புருஷர்களின் பருவப் பெயர்களும், மானிட இன்பங்களில் 55ம் இதில் ததும்பிக் கிடக்கின்றன.

புத்தகம் 1-க்கு வி. பி. சார்ஜ் உள்பட விலை ரூ. 1

எம். லீலா அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை மதராஸ்.

இனம்! இனம்!! இனம்!!!

"கலியுக ரகஸ்யம்"

கிரவுன் 24 பக்கம் கொண்ட இச்சிறு புத்தகத்தில் உலகத்தில் நடந்ததும, [illegible] போவதுமான பல அரிய தேவரகஸ்யங்கள் அடங்கியுள்ளது. ஒவ்வொருவரும் தருவித்துக் கண்ணுறவேண்டியது அவசியம். சொற்பகாபிகளே வெளியிடப் பட்டுள்ளன. முந்துங்கள் தே[illegible] ளவர்கள், 2-அணா போஸ்டேஜ் ஸ்டாம்[illegible] லூல் புத்தகம் அனுப்பப்படும். விலாச[illegible]

கே. வி. அய்யர்,
நெ. 77., காமாட்சி ஜோசியர் தெரு, கும்ப[illegible]


223465

ரிஜிஸ்டர் நெ. M. 1930] [வருட சந்தா ரு. 2—0—0.

வந்தேமாதரம்.

# கி ரா ம ா னு கூ ல ன்.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை]

3 - NOV 1924

"ஒன்று பட்டாலுண்டே வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே.
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்நமக்கேதுவேண்டும்"—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை.

புத்தகம் 1. ரக்தாக்ஷி-வரு ஆடி-மீ ஸஞ்சிகை. 7

## வெள்ளச்சேதம்.

ஜலத்தட்டினால் குருவைப்பயிர்கள் வாடியும் நாத்தங்கால்கள் சாய்ந்துகொண்டும் இண்டாடிய சமயத்தில் திடீரென்று மலையடி வாரத்தில் அதிக மழைபெய்து ஏராளமான வெள்ளம் வந்துவிட்டது. இதுவரையில் எவ்வருஷத்திலும் அவ்வளவு மழை பெய்ததும் கிடையாது, இவ்வளவு வெள்ளம் வந்ததும் கிடையாது என்று வயது முதிர்ந்த பெரியோர்கள் கூறுகின்றார்கள். வெள்ளம் பெருகப் பெருக கரைகள் தாங்க முடியாது காவேரியும், கொள்ளிடமும் பலவிடங்களில் உடைப்பெடுத்துக் கொண்டது. சிற்றாறுகளின் கதியைக்கேட்பானேன். ரயில்வே லயன்களும் தகர்த்தெரியப்பட்டன, அநேககிராமங்கள் அழிந்துபோயின. உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் மிகுதியாய் ஏற்பட்டுவிட்டன. நன்செய் நிலங்கள் மணல் மேடாகிவிட்டன. சிலவிடங்கள் பள்ளமும், படுகுழியுமாய்ப்போய்விட்டன. வீடு[illegible]ள் இடிந்துபோயின. ஆடு, மாடுகள் ஜீவனமின்றி தவிக்கின்றன. வடரெங்கம் கோவில் அடியோடு பெயர்த்தெரியப்பட்டது. இனி இவற்றிற்கெல்லாம் பரிகாரம் செய்யவேண்டியது. கவர்ன்மெண்டாரின் கடமையன்றோ! சில கவர்ன்மெண்டு பெரிய உத்தியோகஸ்தர்களும், மேன்மைதங்கிய கவர்னரும் உடைப்பெடுத்த ஸ்தலங்களை வந்துபார்வையிட்டுப் போயினர். கவர்ன்மெண்டாரின் உதவி சரிவர கிடைக்கவில்லையென்று சொல்லப்படுகிறது. தர்மசிந்தையுள்ள கனதனவான்களின் உதவியாலும், வெள்ளக்கஷ்டநிவாரணக் கமிட்டியாரின் முயற்சியாலும், கஷ்டப்பட்டுதவிக்கும் ஜனங்களுக்குச் சிறிது உதவிசெய்யப்பட்டு வருகிறது. இனியாவது இம்மாதிரியான உடைப்புகள் எடுக்காமலிருக்க வேண்டியதற்குச்செய்யவேண்டியதென்ன? எதனால் இவ்வுடைப்புகள் உண்டாயிற்று என்ற விஷயங்களை ஆராய்ந்துத்தக்க பரிகாரங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமன்றோ! ஆறுகளின் ஓரங்களில் நாணல் போட்டுக் கரைகளை வருஷா வருஷம் பழுதுபார்த்துக் கொண்டிருந்த வழக்கம் கைவிடப்பட்டுவிட்டது. நாணல்போட்டு ஆறுகள் அகலமாய்ப் போகாமல் செய்வதினால் நீரோட்டத்தின் வேகம் அதிகரித்து மணல் மேடிட்டுப்போகாமல் மணலை அடித்துக்கொண்டு போய் ஆறுகள் பள்ளமாயிருப்பதற்கு ஒரு காரணமாயிருந்தது. ஆறுகள் மேடிட்டுப்

போயிருப்பதற்குத்தக்கபடி கரைகள்உயர்த்தப்படாதது மற்றொருகாரணமாகும். ரயில்வே லயன்களிலும், அதிகமான பாலங்கள், மதகுகள்,கட்டைகள் முதலியவைகளினாலும் நீரோட்டத்தின் வேகம் தடைப்படுவதுமோர்காரணமாகும் டி.பி. டப்ளியூ டி.பார்ட்மெண்டுக்காக சென்ற 10-வருஷ காலமாக செலவழித்திருக்கிறபணத்தில் எவ்வளவு பாகம் அபிவிருத்திச் செலவுக்காகவும், எவ்வளவு பாகம் கட்டிடங்களின்செலவிற்காகவும்,எவ்வளவு பாகம் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திற்காகவும், படிக்காகவும் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்ற கணக்கை வெளிப்படுத்தும்படி, யாராகிலும் ஒரு சட்டசபை மெம்பர் கேள்விகேட்டு வெளிப்படுத்துவாரானால் கெவர்ன்மெண்டார் நீர் பாசன விஷயமாய் உண்மையில் எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறார்கள் என்பதும், என்னவேலை செய்திருக்கிறார்கள் என்பதும் வெளிப்படும். இனியாவது இதுபோன்ற அபாயங்கள் நேரிடாமல் தடுக்கப்பாடுபடவேண்டும். ஆற்றின் கரைகள் பலமாக உயர்த்தப்படவேண்டும் மறுபடியும், நாணல் போடும் வழக்கத்தை அநுஷ்டானத்துக்குக்கொண்டுவரவேண்டும்.

சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் மேடிட்டும், பள்ளமாயும் போய் தவிப்பவர்களுக்கு யார் பரிகாரம் செய்யவேண்டியது? இதற்கு கெவர்ன்மெண்டாரே பொறுப்பாளியாகவேண்டும். நிலங்கள் தங்களுடையது நிலவரியானது பாதிவாரம், மிராசுதார்கள் கெவர்ன்மெண்டின் குடிகள்என்று சொல்லிக்கொண்டிருக்கும். கெவர்ன்மெண்டார் ஷை நிலங்களை செப்பனிட்டுக்கொடுக்க உடனே முன்வராமல் மௌனம் சாதிப்பதின் காரணமென்ன? அதிகவரிப்பணம் செலுத்தமுடியவில்லையென்று மறுத்தபோது எவ்வளவு வேகமாக நடவடிக்கை நடத்தினார்கள். இப்பொழுது அந்த வேகம் எங்குபோயிற்று காவேரியில் வரும் ஜலம் பூராவும் கொள்ளிடத்தில்விழுவதை அடைக்கமுடியாமல் தவிக்கிறார்கள், மிராசுதார்களே! வாருங்கள், ஆட்கள் அனுப்புங்கள் என்று கதறுகிறார்கள். வசூல் காலத்தில் காட்டியபிரதீரமெங்கே? இப்பொழுது ஒலமிட்டுக்கொண்டு மிராசுதார்களை நாடுவதெங்கே? இப்பொழுதுதான் மிராசுதார்களின் சக்திபுலப்படுகிறதோ! இவ்வருஷம் வருணபகவான் தயவிருந்தால் மாத்திரம் தானியத்தை கண்டுபிடிக்கமுடியுமேதவிர, கெவர்ன்மெண்டாரின்சக்தியால்முடியாதென்று தெரிகிறது. வருணபகவான் தயவினால்ஒரு சமயம் ஒன்றுக்கு மூன்று செலவழித்து பாடுபட்டு சிறிதுவிளைந்தால் வந்துவிடுவார்கள் ஜனவரிமாதத்திலேயே வட்டிபோட்டு கிஸ்தியைவசுலிக்க. அப்பொழுது சிறிதும் யோசிக்கமாட்டார்கள். சிலவு என்ன ஆயிருக்கும், மாசூல் என்ன கண்டிருக்கும், என்ற கணக்கை பார்க்கவேமாட்டார்கள். இது கெவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்ததாகமாட்டாது. ஆகையால் கெவர்ன்மெண்டார் இப்பொழுதே உடைப்பெடுத்த ஸ்தலங்களிலுள்ள கஷ்டங்களுக்கு தக்கபரிகாரம் தேடிக்கொடுப்பதற்கும் உத்தமசேரி உடைப்பை உடனே அடைப்பதற்கும், இனி இவ்விதமான உடைப்புகள் ஏற்படாதவாறு தடுப்பதற்கும், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களென்று நம்புகிறோம்.

———0———

# கதர்.

தீபாவளிபண்டிகையை இந்துக்கள் விசேஷமாகக் கொண்டாடுவது வழக்கமாயிருக்கிறது. அன்றையதினம் ஏழைகள் முதல் பணக்காரர்கள் உள்பட ஜாதிவித்தியாசம் இல்லாமல் எல்லோரும் நூதனவஸ்திரம் தரித்துக்கொள்வதும் வழக்கமாய் ஏற்பட்டிருக்கிறது. இந்துக்கள் எந்தக்காரியத்தையும் புராணத்தை அநுசரித்தே தெய்வ பக்தியுடன் செய்வதென்றே ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல் இந்தப் பண்டிகை நரகாசுரன் என்ற ஒரு ராக்ஷதனைக்கொன்ற



தினமாகிய தீபாவளிதினத்தை நரக சதுர்த்தசி என்று ஐப்பசி மீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யன்றையதினம் கொண்டாடப்படுகிறது. ஷை நரகாசுரன் கொடியவனாயிருந்தும் தான் இறக்கும் காலத்தில் நல்லபுத்தியுண்டாகி தான் இறந்ததினத்தைப் பண்டிகையாகக் கொண்டாடவேண்டுமென்று பகவானிடத்தில் வரம் கேட்டபடி அவரால் அளிக்கப்பட்டு அதை இப்பொழுது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். பகவான் கொடுமையை நிவர்த்திப்பதற்காக நரகாசுரனைக் கொன்றார் என்பதை நாம் அன்றையதினம் ஞாபகத்தில் வைக்கவேண்டியதன்றோ! அதை நீங்கள் உண்மையென்று நம்புகிறீர்களல்லவா? அது வாஸ்தவமானால் வறுமை என்னும் கொடுமை இந்தியாவை வாட்டிவருவதை நிவர்த்திக்கவேண்டியது பகவான் இஷ்டப்படி உங்கள் கடமையல்லவா? அன்னிய நாட்டுத்துணிகளால் நம்நாட்டுப் பணம் 63-கோடிக்கு மேல் வெளிதேசம் சென்று நம் நாடு வறுமை என்னும் கொடுமை வாய்ப்பட்டு தவிப்பதை ஒழிக்கவேண்டாமா! அதற்குப் பரிகாரம் உங்கள் கையில் தானே யிருக்கிறது. ஒவ்வொருவரும் கதரை உற்பத்தி செய்வதிலும், கதரை அணிவதிலும் ஊக்கம் காட்டினால் தான் இவ்வறுமைக்கொடுமை நிவர்த்தியாகும். தீபாவளிப் பண்டிகையன்று ஒவ்வொருவரும் கதரையே அணியவேண்டுமென்று நாம் பன்முறையும் வேண்டிக்கொள்ளுகிறோம். மகாத்மா காந்தியடிகள் உங்கள் நன்மையைக்கருதி கதர், கதர் என்று கதரிக்கொண்டிருப்பதை இச்சமயம் மறந்துவிடாதீர்கள். பரதேசித்துணியை அணிவது மகாபாபச் செயலாகுமென்று கருதுங்கள். கதரை அணியுங்கள்! கதரை அணியுங்கள்!!

---

## கிராம உத்தியோகஸ்தர்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும்,

ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் 50 வட்டங்களுக்கு ஒருவராக யிருந்ததை 20, 25 வட்டங்களுக்கு ஒருவராகச்செய்து அவர்களின் சம்பளத்தையும் உயர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் மூன்று மாதத்திற்கொருதடவை ஒருகிராமத்துக்குப்போனவர் இப்பொழுது மாத மிருமுறை போகிறார்கள். அதனால் சர்க்காருக்கு யாதொரு நன்மையும் கிடையாது. ஆனால் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அனர்த்தமாயிருக்கிறது. ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர் தன் கீழ் உள்ள வட்டங்களில் எத்தனை வட்டங்களின் கிராம உத்தியோகஸ்தர்கள் பேரில் புகார்செய்து தாசில்தார்களுக்கு ரிபோர்ட்டு செய்திருக்கிறார்கள் என்பதை பார்த்தால் அவர் புகார்செய்து ரிப்போர்ட்டு எழுதாத வட்டமே இராதென்று தோன்றுகிறது. அவர்களுக்குச் சரியானபடி வேலையில்லாததினாலேயே புகார் எழுதும்படியான வேலையிலிறங்க வேண்டியிருக்கிறதென்று அபிப்பிராயப் படுகிறோம். அடிக்கடி மேலதிகாரிகளுக்கு எழுதுகிறவர்கள் தன் கீழ்உள்ள உத்தியோகஸ்தர்களைச் சரிவர நடத்தத்திறமையற்றவர்கள் என்றுதான் ஏற்படும். ரெவினியூ இன்ஸ்பெக்டர்களைக்குறைத்து அவர்களுக்கு வட்டங்களை ஜாஸ்தி செய்யவேண்டியது நியாயமாகும். இது ரெவினியூ இலாக்காவின் சிக்கன விஷயமாய் ஸ்பெஷல் ஆபீஸராக நியமிக்கப்பட்டிருக்கும் திவான்பகதூர் R. ராமச்சந்திரராவின் கவனத்தைப் பெறுமென்று நம்புகிறோம்.

---

## கிராம உத்தியோகஸ்தர்களும் கடுதாசி சப்ளையும்.

ஒரு தாலூக்காவில் அச்சுபாரம் இல்லாமையால் கடுதாசி சப்ளை செய்யவேண்டுமென்று சில கிராம உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து ஒரு ரிப்போர்ட்டு எழுதிக்கொண்டார்களாம். இதைப் பார்த்த தாசில்தார் நடுங்கி விட்டாராம்? ஏனோ தெரியவில்லை. சிலரைக் கூப்பிட்டு உங்களை ஏன் பிராசிகூஷன் செய்யக்கூடாதென்று கேட்டாராம். என்ன குற்றம் செய்து விட்டார்கள், தனித்தனி ரிப்போர்ட்டு எழுதாமல் ஏன் சேர்ந்து எழுதினீர்கள் என்று கோபித்துக் கொண்டனராம்.

என் சேர்ந்து ரிப்போர்ட்டு எழுதிக்கொள்ளக் கூடாது? கெவர்ன்மெண்டாருக்கும் அரைக்கடு தாசியுடன் போய் விட்டதே! சிக்கனம் தானே! தனித்தனி எழுதினல் 20 அரைக் கடுதாசிகள் செலவாகாதா? கிராம உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து ரிப்போர்ட் செய்து கொள்ளக் கூடாதென்று எந்தச்சட்டம் தடுக்கிறது. இம்மாதிரியாக அனாவசியமான மெறட்டல்களால் பிரயோஜனமில்லையென்றும்கிராம உத்தியோகஸ்தர்களைப்பக்ஷமாய் நடத்த வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## அம்மங்குடி கிராமப் பாய்வாய்க்கால்.

அம்மங்குடி கிராம பாய்வாய்க்காலானது திருநாகேஸ்வரத்துக்கு சமீபமாக கீர்த்திமான் ஆற்றில் பிரிகிறது. அதற்கு தலைப்பில் ஸ்குரு ஷட்டர்ஸ் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த ஸ்குரு ஷட்டர்ஸ் பழுதாய்ப்போய் இரண்டு வருஷமாகிறதாம். அதனல் அந்த வாய்க்கால் தலப்பு திறக்க முடியாமல் அந்த கிராமத்திற்கு ஜலம் பாய்ச்சலுக்கு வழியில்லாது இரண்டு வருஷகாலமாய்த் திண்டாடுகிறார்கள். இதனால ஏராளமான நஷ்டம் (வருஷம் 1-க்கு சுமார் ரூ 40,000)கிராமத்திற்கு ஏற்பட்டு வருகிறதாம். இந்த முக்கியமான விஷயத்திற்கு பல மனுக்கள் கிராமத்தாரால் செய்யப்பட்டும் கேள்வி முறையில்லையாம்; இதனல் ஏற்படும் நஷ்டத்திற்கு கெவர்ன்மெண்டார் பேரில் விபாஜ்யம் செய்ய வசதியிருந்தால் தான் அதிகாரிகள் கவனிப்பார்கள் போலிருக்கிறது. நீர்ப்பாசனவிஷயமாய்ப்பெரியதிட்டங்கள் போடுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் கெவர்ன்மெண்டார், இதையும் கவனிப்பார்களென்று நம்புகிறோம். டிஸ்டிரிக்ட் கலெக்டரின் கவனத்தைப் பெறுமாக.

## கிராமாந்திரங்களில் ஆஸ்பத்திரிகள்.

ஜாதிய நிர்மாண விஷயத்தில் புதிய கவர்னர் மிகுந்தசிரத்தை யெடுத்துக்கொள்ளுகிறார். கிராமாந்தரங்களில் வைத்திய வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன் 300 ஆஸ்பத்திரிகள் புதிதாகஏற்படுத்த யோசனை நடந்து வருகிறது. பிரதி ஜில்லாவுக்கும் இந்த ஏற்பாட்டின்படி 12 புதிய வைத்திய சாலைகள் ஏற்படும். வருஷத்துக்கு 3லட்ச ரூபாய் இதன் பலனக அதிகச் செலவு செய்ய வேண்டியிருக்கும். அடுத்த அக்டோபர் முதல் அவ்வைத்தியசாலைகளை ஆரம்பித்து விட்டால் இவ்வருஷத்துக்கு 1¼ லட்சத்துக்குமேல் அதிகப்படியாக செலவழியாது. இதில் 75 ஆயிரம் கெவர்ன்மெண்டாரே ஆரம்பத்தில் கொடுப்பார்கள். லோக்கல் போர்டுகள் ரூபா 5000 கொடுக்கும். 2000 ஜனங்கள் வசிக்கக்கூடிய இடங்களில் எல்லாம் இனி வைத்தியசாலைகள் இருப்பது சாத்தியமாகும்.

## சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் தயவு செய்து சந்தாத் துகையை ஒரு வாரத்திற்குள் மணியார்டர் செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

மணியார்டர் செய்யாதவர்களுக்கு ஒரு வாரத் திற்கு மேல் வி. பி. அனுப்பப்படும். அதனல் 3 அணு அதிகமாகிறது. தயவு செய்து வி.பி.யை பெற்றுக்கோள்ளக் கோருகிறோம். [ப—ர்.]

## T. S. கணபதி சாஸ்திரிகளின் ஆயுர்வேத ஔஷதங்கள்.

மகா பில்வாதி முதலான லேஹ்யங்கள், தைலவகைகள், பஸ்ம செந்தூரங்கள், ரஸாயனங்கள், கிருதங்கள் முதலிய மருந்துகள் இவ்விடத்தில் சாஸ்திரீயமாக செய்யக்கூடியதும் இவ்விடத்தில் பச்சிலை மூலிகைகள் அகப்படாததற்கு மலையாளமிருந்துவரவழைக்கப்பட்டு செய்ததுமான மருந்துகளை ஆஸ்திகர்களாயுள்ள [illegible] நாட்டு பிரமுகர்கள் ஒரு தடவை வாங்கிஉபயோகித்[illegible] அதன் உண்மை விளங்கும். (விலை முதலிய[illegible] விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு[illegible]

விலாசம்,

T. S. கணபதி சாஸ்[illegible]

3, லெக்ஷ்மி விலாஸ் அக்ரஹாரம், கு[illegible]



# தற்கால நிலைமை.

(ஓர் சம்பாஷணை.)

———:(o):———

சாஸ்திரிகள்:— என்ன தீக்ஷதர்வாள் இந்தப் பக்கத்திலேயே காணேம் பார்த்துவெகுநாளாச்சுதே.

தீக்ஷதர்:— ஆமாம் நான் கொஞ்சம் அவசரஜோலியாக வெளியூர்களுக்கு போயிருந்தேன் அதனல் இவ்விடம் வர சௌகரியமில்லாது போயிற்று. பெரியவாள் சௌக்கியந்தானே?

சாஸ்திரிகள்:— எல்லாம் தங்கள் அனுக்கிரகம். சென்றமாதம் வைக்கம்சத்தியாக்கிரகம் கட்டாயம் ஜெயமடையக்கூடும் தீண்டாமை ஒழிந்து விடக்கூடும். என்று தெரிவித்தீர்களே அது எவ்விதமாயிற்று.

தீக்ஷதர்:— ஏன் அதில் என்ன சந்தேகம் ஜாதிஹிந்துக்களில் சில விஷமிகள் சத்தியாக்ரகிகளை அடித்தும் ஹிம்சித்தும் வந்தார்கள். ஸத்தியாக்கிரகி ஒருவருக்கு கண்ணில் சுண்ணும்பை வைத்து அடைத்துவிட்டார்கள். அவ்வளவு கொடுமையாக நடத்தப்பட்டும் ஸத்தியாக்ரகிகள் அஹிம்சா விரதத்தை கொஞ்சமேனும் தவாறது நடந்து கொண்டபடியால் அவ்விதம் விஷமம் செய்துவந்த ஜாதி ஹிந்துக்களுக்குத் தானகவே புத்தி மாறித் தன் குற்றத்தைத் தெரிந்துகொண்டு இப்போது அவ்வித ஹிம்சைகளை நிறுத்தி விட்டார்கள். கண்ணில் சுண்ணும்பை வைத்து அடைத்தவர் தன் குற்றத்தை எண்ணி மனம் நொந்து தன் உயிரையே மாய்த்துக்கொண்டு விட்டார் என்றால் சத்தியாக்கிரகம் வெற்றியடைந்துவிட்டதென்பதற்கு வேறுருஜூ வேண்டுமோ? இப்போது "தீண்டாமை விலக்க வேண்டியது அவசியந்தான் ஆனல் நிர்ப்பந்தப்படுத்தி தீண்டாமையை விலக்கும்படி செய்யக்கூடாது" என்று திருவாங்கூர் அரசாங்கத்தார் தெரிவிக்கின்றனர். இதனல் அரசாங்கத்தார் ஒருபடி இறங்கி விட்டதாகத் தெரியவில்லையா? இம்மாதிரியே இன்னமும்கொஞ்சகாலம்நடந்துவந்தால் அரசாங்கத்தாருக்கும் ஜாதிஹிந்துக்களுக்கும் தானகவே மன மாறுதல் உண்டாவதுநிச்சயம் அப்போதுஅவர்கள் தங்கள் பிடிவாத புத்தியைத் தாங்களாகவே மாற்றிக்கொண்டு விடுவார்கள்.

சாஸ்திரிகள்:— ஸ்ரீமான் தாஸ்கஷியார் வங்காளத்தில் தாரகேஸ்வரம் ஸத்தியாக்கிரகம் நடத்துகிறார்களாமே அது எவ்வித மிருக்கிறது.

தீக்ஷதர்:— அது இன்னமும் நடந்துகொண்டுதானிருக்கிறது மஹந்துவிற்கு அரசாங்கத்தார் ஒத்தாசையாக விருக்கின்றார்களாம். மஹந்துவின் காரியாலயத்தை போலீஸார் காவல் புரிந்து வருகின்றனர். இதுவரையில் 1600 ஸத்யாக்கிரகிகளுக்குமேல் கைதியாகியிருக்கின்றார்கள். இன்னமும் தினமும் 16 ஸத்யாக்கிரகிகள் கைதியாகிக் கொண்டு வருகின்றார்கள். மஹந்து சில நிபந்தனைகளின்பேரில் இணங்கி வரத் தயாராக விருக்கின்றார் ஆனல் தாஸ்கஷியார் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளவில்லை.

சாஸ்திரிகள்:— ஜெயித்தோ ஸத்யாக்கிரகம் எவ்வித மிருக்கின்றது.

தீக்ஷதர்:— மஹா முரட்டு சுபாவத்துடன் கூடிய சீக்கியர்கள் மகாத்மாஜீயின் உபதேச மொழிகளின் பெருமையை முற்றிலும் உணர்ந்து அவற்றின் உண்மையான கருத்தை அஹிம்ஸா தர்மத்துடன் கூடியபரமசாந்தமான நடையினல்உலகத்தோர்க்குமெய்ப்பித்து நடித்துக் காண்பித்து நம் பாரதநாட்டின் திலகம் போன்று விளங்குகின்றனர். அவர்கள் இதுவரை 8 ஜாதா (கூட்டம்) பரமசாந்தர்களாக தங்கள் அகண்ட பாடத்துடன் (வேதபுத்தகம்) ஜெயித்தோ சென்று கைதியாகி யிருக்கின்றனர் இன்னமும் ஜாதாக்கள்புறப்பட ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. கவர்ன்மென்டாரும் பிரபந்தக் கமிட்டியாரும் ராஜிபேச ஏற்பாடு செய்தும் அபிப்பிராயபேதத்தினல் ராஜி நிபந்தனையை சத்தியாக்கிரகிகள் ஒப்புக்கொள்ளவில்லை ஸத்தியாக்கிரகம்நடந்து வருகிறது.

சாஸ்திரிகள்:— மகாத்மா காந்திக்கும் ஸ்ரீமான் தாஸ் கஷியாருக்கும் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்கில் ஏதோ மனஸ்தாபமாமே அது எவ்விதமாச்சுது.

தீக்ஷதர்:— மகாத்மாஜீ கதர் பிரசாரம் ஒழுங்காகவும் வெகு மும்முரமாகவும் நடத்தப்படவேண்டியதற்காக எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அதமபக்ஷம்பிரதிமாதமும் அவர்கள்சுயமாக நூற்றநூலாக 10,ரூபாயிடை நூல் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தவறினல் அவர்கள் அங்கத்தினராக

விருப்பதற்கு லாயக்கற்றவராக கருதப்படும் என்று ஒரு நிபந்தனை யேற்படுத்தி அகில இந்திய கமிட்டியின் ஆலோஜனைக்கு கொண்டு வந்ததன்பேரில் சுயராஜ்யக் கக்ஷியார் அத்தீர்மானத்தின் முற்பகுதியை ஒப்புக்கொண்டும் பிற்பகுதியை விலக்க வேணுமாயும் ஒரே பிடிவாதமாக தங்கள் கக்ஷிவாதத்திற்குறிய காரணங்களை நிபந்தனையின்படி நூல் நூற்க முடியாதவர்களோ அல்லது தெரியாதவர்களோ எங்காவது எவரிடமாவது 10 ரூபாயிடை நூல் கிறயத்திற்கு பெற்று அனுப்பிவிடக்கூடும் என்றும் இன்னும் பலவித காரணங்களாலும் விளக்கிக்காட்டிக் கேட்டுக் கொண்டதன்பேரில் மகா உக்கிரமான ஸம்வாதத்தின்பேரில் பிற்பகுதி விலக்கப்பட்டு பாக்கி தீர்மானத்தை இருகக்ஷியோர்களும்ஒப்புக்கொண்டு விட்டனர்.

சாஸ்திரிகள்:- ஏதோ ஒரு தீர்மானத்தில் மகாத்மாஜிக்கு மெஜாரிட்டி ஓட்டுக்கிடைத்தும் கூட ஒருசுவல்ப ஓட்டுகளினால் மெஜாரிட்டி தனக்குக் கிடைத்திருந்த போதிலும் தன் கக்ஷி தோற்றுவிட்டதாகவே வருத்தப்பட்டுக்கொண்டு காங்கிரஸை விட்டு விலகிவிடுவதாய்க்கூட தெரிவித்தாராமே?

தீக்ஷதர்:— அது வாஸ்தவம்தான் அதாவது வங்காளத்தில் எர்னெஸ்டுடேஎன்னும் ஐரோப்பியர் ஒருவரை தவறுதலாய் சுட்டு வீழ்த்திய கோபினாதஷா என்னும் வங்காள வாலிபனை அவன் செய்த அடாத செயலுக்காக தூக்கிலிடப் பட்டது. அவ்விதமிருக்க வங்காள மாகாண மகாநாட்டில் ஸ்ரீமான் தாஸ் கக்ஷியார் அவ்வாலிபன் செய்த அடாத செயலை வெறுப்பதாயும் அவ்வாலிபன் தன் தேச விடுதலையின்நிமித்தம்ஜீவனைக்கூட தியாகம் செய்வித்து விட்டபடியால் அவ்வாலிபனுடைய உண்மையான தேசபக்தியைப் பாராட்டுவதாகவும் தீர்மானித்தனர். அத்தீர்மானம் அஹிம்சா தர்மதிற்கு விரோதமானது என்று மகாத்மாஜி அபிப்பிராயப்பட்டு அத்தீர்மானத்தை கண்டனம் செய்து ஒருதீர்மானத்தை அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியில் கொண்டுவரப்பட்டது. அச்சமடம் இதைப்பற்றி விவாதிக்கப்பட்டு ஸ்ரீமான் தாஸ் கக்ஷிக்கு ஒரு சுவல்ப ஓட்டு குறைவினால் மைனாரிட்டியாகி விட்டது. என்ற போதிலும் அதிமேதாவியான மகாத்மாஜி தன் செல்வாக்கை உத்தேசித்து மெஜாரிட்டி ஏற்பட்டிருக்கிறதேதவிர்த்து தீர்மானத்தின் போக்கை அனுசரித்து ஏற்படவில்லை என்ற உண்மையை அறிந்துகொண்டு காங்கிரஸில் தன் நிர்வகிப்பைவிட்டு விலகிவிடுவதாக தெவித்ததன்பேரில் ஸ்ரீமான் தாஸ்கக்ஷியினரும் வைதீக ஒத்துழையாதாரும் அபிப்பிராய பேதமன்னியில் ஏகமனதாக மகாத்மாஜிதான் தங்கள் தலைவர் என்றும் அவரிடம் தங்களில் எவருக்கேனும் எள்ளளவேனும் நம்பிக்கைக்குறைவு ஏற்படவில்லை என்றும் அவரே தங்கள் குருவாகவும் தலைவராகவும் இருந்து வழிகாட்டவேணுமாய்ப் பிரார்த்தித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதனால் மகாத்மாஜியும் அதற்கு ஒருவாறு சம்மதித்தார். அதன் பிறகு மகாத்மாஜி ஒரு அறிக்கை மூலமாக இவ்வருஷத்தில் "கதர்பிரசாரம்-தீண்டாமை ஒழித்தல்-இந்துமுஸ்லீம் ஒற்றுமை" இம்மூன்றும் முக்கியமான வேலைதிட்டமாக ஏற்படுத்தி அவற்றை வைதீக ஒத்துழையாதார், சுயராஜ்ய கக்ஷியார், மிதவாதிகள், ஜஸ்டிஸ் திராவிட கக்ஷியார், என்ற கக்ஷி வேற்றுமை யன்னியில் நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சாஸ்திரிகள்:— கோபினாதஷாவின் தீர்மான விஷயமாக பார்லிமெண்டில் ஸ்ரீமான் தாஸைப்பற்றி மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேணுமாய் வெகு மும்முரமாய் ஏற்பாடுகள் நடந்து வருகின்றதாமே. அரசாங்கத்தார் ரொம்பவும் கடுமையாக விருக்கின்றார்களாமே.

தீக்ஷதர்:— இந்தியா அரசாங்கத்தாரின் அபிப்பிராயம் இன்னதென்று புலப்படவில்லை ஆனால் பார்லிமெண்டு மகாசபையில் பிரமாதமாகக் கேழ்விகள் கேழ்க்கப் படுகின்றது. இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் தான் பயப்படவில்லை என்றும் இம்மாதிரியான தீர்மானங்கள் பல்லாயிரக்கணக்கானவைகள் ஒவ்வொருதேசத்தாரோரும் இதற்குமுன் செய்திருக்கின்றனர் என்றும் அயர்லாந்து தேசத்தாரைப்போல் ஹிம்சையோடுகூடிய முறையில் நடந்துகொள்வதை தன்னுடைய தீர்மானத்தில் முற்பகுதியில் வெறுக்கப் பட்டிருப்பதாயும் ஒழுங்கான நீதியுடன் தன்னுடைய தீர்மானத்தைபரியாலோசனை செய்யப்படும் பக்ஷத்தில் யாதொரு நடவடிக்கையும் நடத்துவதற்கு ஹேதுவில்லை என்றும் ஏற்கனவே மகாத்மாஜியே இம்மாதிரி தீர்மானம் ஒருசமயம் செய்திருக்கிறார் என்றும் தற்சமயம் தனக்கு வங்காளத்திலும் பிறமாகாணங்களிலுமிருந்து வரும் செல்வாக்கைக் கண்டு பொறாமைகொண்டு ஒருக்கால் தன்னை சிறைப்படுத்த ஏற்பாடு செய்வதாக விருந்தால் அதற்கும் தான் தயாராக விருப்பதாய் ஸ்ரீமான் தாஸ் தெரிவிக்கின்றார். கூடிய சீக்கிரத்தில் இது விஷயமாய் பார்லிமெண்டில் பிரமாதமான விவாதம் நடக்கக்கூடும் என்று தோன்றுகிறது,



சாஸ்திரிகள்:— அதிருக்கட்டும் முனிஸிபாலிட்டியை ஒத்துழையாமைக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள்கைப்பற்றிக்கொள்ள வேண்டிபிரமாதமாக பகீரதப் பிரயத்தினங்களைச் செய்து பிரசாரம் நடத்தி வருகின்றார்களே அவைகளினால் என்ன பிரயோஜனம்.

தீக்ஷதர்:— அதென்ன அவ்விதம் அலக்ஷியமாகச் சொல்லி விட்டீர்கள் முனிஸிபாலிட்டிகளையும் லோகல் போர்டுகளையும் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்றிக் கொண்டுவிட்டால் அவைகளின் மூலமாய் (1) தேசியக் கல்வி போதனை (2) கதர் பிரசாரம் (3) ஆயுர்வேத யூனானிவைத்தியமுறைகளைப் பரவச்செய்தல் (4) சுதேச கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் (5) கூடுமானவரையில் அன்னிய வஸ்து பஹிஷ்காரம், இன்னம்இவைகள் போன்ற பல்வேறு காரியங்களை சாதித்துக்கொள்ளவும் காங்கிரஸ் நிர்மாண வேலைத்திட்டத்தை பூர்த்திசெய்து கொள்ளவும். மேலும் இவ்வித ஸ்தாபனங்களை நிர்வகித்து செவ்வனே நடத்திக் கொண்டால் நமது அரசாங்கத்தார் நமக்கு பூரா சுயராஜ்ஜியமளித்துவிட்டால்நம்மால் நிர்வஹித்து நடத்த முடியாதென்றும் தாங்கள் அக்காரியங்களை நடத்த வேண்டியதற்காக ஏற்பட்டிருக்கிற அவதார புருஷர்கள் என்று வெளி நாடுகளில் நடித்துவரும் நாடகங்களெல்லாம் "செட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில்" எனும் பழமொழிக்கொப்ப வெட்டவெளிச்சமாகி விடும். வெளிநாடுகளில் நடிக்கப்பட்டுவரும் வேஷமும் நின்றுவிடும்.

சாஸ்திரிகள்:— அரசாங்கத்தார் வெளிநாடுகளில் நம்முடைய பேரில் சொல்லப்படும் குறைகள் நின்றுவிட்டால் அதனால் நமக்கென்னலாபம்? முனிஸிபாலிட்டியைக் கைவசப்படுத்திக் கொண்டால் மாத்திரம் எவ்விதம் ஸ்வராஜ்ஜியம் அளிக்கப்படும்.

தீக்ஷதர்:— சாஸ்திரிகளே சுயராஜ்ஜியம் என்பது ஒரு மூட்டையல்ல பிறர் தூக்கி நம்முடைய கையில் கொடுப்பதல்ல. குடும்பத் தலைவன் வித்தம் தன் குமாரனுக்குப் போதுமானவயது வந்தவுடன் குடும்ப பாரத்தை தலையில் வைத்து விட்டான் என்கின்றோமோ அம்மாதிரி தான்சுயராஜ்ஜியமும். வயது வந்த குமாரன் குடும்ப நிர்வகிப்பை தன்னிடம் விட்டுவிடும்படி கேட்டால் நாம் ஆக்ஷேபிப்போமா? அப்படிக் கல்லாது ஆக்ஷேபித்தால் எவ்விதம் தன் பாகத்தை அடையவேண்டி தன் காரியத்தைக் கவனித்துக்கொள்ளுகின்றானோ அவ்விதமே இப்போதே சுயராஜ்ஜியமளிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது அரசாங்கத்தார் ஆக்ஷேபிக்கிறபடியால் முதல் தவணையாக, லோகல்போர்டுகளையும் முனிஸிபாலிட்டிகளையும் கைப்பற்றிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது இது தகப்பனும் பிள்ளையும் மரியாதையாகச் செய்து கொள்ளும் விவகாரத்தைப் போன்றது. இனி இதற்கும் இணங்காவிடில் தகப்பனிடமிருந்து வந்த பயபக்தி விசுவாசம் மரியாதை முதலானவை எவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி பிறகு மனஸ்தாபமானது வரவர விருத்தியாகி விடுகின்றதோ அதேமாதிரியாக இதிலிருந்தும் அரசாங்கத்தாருடைய நோக்கம் மாறுதலடையாத பக்ஷத்தில் வரவர மனஸ்தாபம் அதிகப்பட்டு கடையாக வரி கொடுக்க மறுத்துவிட ஹேதுவுண்டாகக்கூடும். ஆகையினால் தான் இவ்விதஸ்தாபனங்களை முதலில் கைப்பற்ற வேண்டுமென்று யோஜனை சொல்லப்பட்டு அதற்கிணங்க பம்பாய்-கல்கத்தா-அலஹாபாத் முதலான பெரிய நகர்களிலெல்லாம் காங்கிரஸ்காரர்கள் ஆதிக்கத்தை அடைந்து விட்டார்கள். அதே மாதிரியாக நமது சென்னைமா நகரிலும் காங்கிரஸ்காரர்கள் ஆதிக்கமடைய வேண்டி பலமான பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. கட்டாயம் தேர்தலில் ஜயமடையக்கூடும் என்று தோன்றுகிறது.

சாஸ்திரிகள்:— என்ன ஜயம் வேண்டியிருக்கிறது. நம்முடைய ஜில்லாவில் கிஸ்தி செலுத்த வேண்டாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டதே ஏதேனும் பிரயோஜனப் பட்டதா? செலுத்தாமலிருந்தவர்களுக்கு பொருள் நஷ்டமும் போதாக்குறைக்கு வட்டி, டிமாண்டுபடி முதலியவைகளும் சேர்ந்ததே இது தானே மிச்சம்?

தீக்ஷிதர்:— பிரயோஜன மேற்படாமல்தான் அரசாங்கத்தார் 100-க்கு 6¼ வீதம் வரியைக் குறைத்தார்களோ? ரீஸெட்டில் மெண்டில் இருபோகமாக கம்பவுண்டு செய்யப்பட்ட நிலங்களை மறுபடியும் ஒருபோகமாக மாற்றினார்களே! இந்த ஜில்லாவரி கொடா இயக்கத்தினால் ஏற்பட்ட அசௌகரியத்தையும் அதனால் உண்டான சிரமத்தையும் அரசாங்கத்தாரைக் கேட்டாலல்லவோ தெரியும் பிரஸவவேதனை மிகவும் அபாயகரமானதாகவும் கடுமையானதாகவு மிருக்கும் காரணத்தைக்கொண்டு ஸ்திரிபுமான்கள் உலகில் ரமிக்காமலிருந்து விடுகின்றார்களோ? இல்லையே, அதுபோல் நஷ்டப்பட்டால் தான் சுகமடையலாம். ஒரு சுவல்பதுகை நஷ்டம் வந்துவிட்டால் என்ன மோசம். நம்மிடம் திருடர்கள் பலாத்காரமாக ஹிம்ஸித்தால் நம்முடைய பொருள்களை நாம் வலுவில் எடுத்து கொடுத்துவிடவில்லையா பசுமாட்டை போஷித்து அதனால் சந்தோஷத்துடன் அளிக்கப்படும் பாலை நாம் அடைந்து கொள்வது நியாயம் அப்படிக்கல்லாது அதை ஹிம்சித்துகயிறுகொண்டு கட்டி அடித்து கறந்துகொள்ள எண்ணினால் ரத்தத்தைத்தான் கறந்துகொள்ள முடியுமே தவிர்த்துபால் என்பதை கண்ணால் பார்க்க முடியாது. இந்த உண்மை அரசாங்கத்தாருக்கு நன்றாகத்தெரியும் போதாக்குறைக்கு திருச்சிராப்பள்ளி ஜில்லாவும் இம்மாதிரி இபக்கத்திற்கு தயாராகி வருகின்றது. இவைகளை எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் எந்த விதமாகவாவது சட்டம் செய்துவிட வேண்டுமென்று அரசாங்கத்தார் முயற்சித்து வருகின்றார்கள் கூடிய சீக்கிரம் மசோதா சட்டசபையில் ஆஜர் செய்விக்கப்பட்டுவிடும் ஆகையால் அதுவரையில் பொருத்திருப்போம்.

வந்தேமாதரம்.

## கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம்.

(ஸ்ரீமான் எஸ். நாராயணஸாமி ஐயர், மிலட்டூர்.)

———(0)———

(134-வது பக்கம் தொடர்ச்சி.)

கிராமத்திலிருப்பவர்கள் சிலர் வரிப்பணம் கொடுக்கையில்பணமில்லாததினால்ஒளிகிறார்கள். கொடுக்கக்கூடியவர்களில் கூடசிலர் தப்புசால்ஜாப்பு சொல்லுகிறார்கள். இவர்களுடைய அவிவேகத்தைக் கண்டு வருத்தி தர்மமாக எண்ணி கையிலிருந்து போட்டு வெட்டுகிறார்கள். சிலர் பின்பு மற்றவர்களிடமிருந்து வசூல்செய்து கொள்ளலாம் என்றும் போட்டு வெட்டுகிறார்கள். ஜலம் வந்தவுடன் எல்லாரும் பாச்சுகிறார்கள். சிலர் மாத்திரம் ஜலம் பாய்ந்த பிறகாவது பணம் கொடுக்கிறார்கள். மற்றும் சிலர் அதுவுமில்லை சரியான கணக்குவைத்திருந்தாலும் அடுத்த காய்ச்சலில் முதலில் செலவழிக்கப்பட்ட தொகையில் கொஞ்சம் வசூலாகும் முழுதொகையும் கிடைக்காது அவர்களை கட்டாயப்படுத்தவும் முடியவில்லை. ஒரு தடவை இவ்வளவு கஷ்டத்தையும் சகித்து இதில் பொறுப்புவைத்து நடத்தின மிராசுதார்கள் மனம் சலித்து அடுத்த தடவை இதில் பிரவேசிக்க பிரியப்படுவதில்லை.

கெவர்ன்மெண்டார் தங்கள் பணத்தை செலவழித்து வாய்க்காலை வெட்டித் தர மறுத்தபோதிலும் மிராசுதார்களிடத்தில் வசூல்த்து வாய்க்காலை வெட்டிகொடுக்க குடி மராமத்து ஆக்ட் என்று ஒரு சட்டம் இயற்றியிருக்கிறார்கள் அதின்கீழ் சில மிராசுதார்கள் தாசில்தார் அவர்களுக்கு மனுசெய்துகொண்டு வாய்க்காலைவெட்டி தரும்படி கேழ்க்கிறார்கள். அவர்களுக்கிருக்கும் பல வேலைகளில் இதை கவனிக்க அவகாசம் ஏற்படுகிறதில்லை மனுதார்கள் ரொம்ப தொந்திரவு செய்தால் வாய்க்கால் வெட்டுக்கு ஒரு திட்டம்போட்டு அந்த திட்டத்தொகையை வீதமாய் செலுத்த கடமைப்பட்டவர்களின் ஜாப்தா தயார்செய்து ஒரு குறிப்பிட்ட தேதியில் வெட்டும்படி நோட்டீஸ் கொடுத்து அப்படி வெட்டாதபட்சத்தில் திட்டப்படி வெட்ட கண்டிராக்ட் விட்டு மிராசுதார்களிடம் ஒன்றுக்- கிரண்டாய் வசூல்செய்து கண்டிராக்ட் தொகைபோக பாக்கியை கஜானாவில் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். பாக்கித் தொகையைக்கொண்டு மனுச்செய்து கொண்டால்அடுத்த வருஷத்தில் வெட்டுகிறார்கள். இல்லா விட்டால் அயன் தொகையோடு சேர்த்து விடுகிறார்கள்.



இந்த விஷயங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே- நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. சரியான மகசூல் கிடைக்காததினாலே சர்க்கார் கிஸ்தி வசூல்தாமதப்பட்டுரிவினியூடிபார்ட்மெண்டாருக்குச்சிரமம் ஏற்படுகிறது. ஒரு கறவை மாட்டை நன்றாய்த் தீனிபோட்டுப்பாலைப் பெருகச்செய்து அதிகப்பாலை அடைவது நல்லதா, அல்லது அதை மேய்ச்சலுக்குக்கூடவிடாமல் பட்டினி போட்டு அதிகப் பால்பெற எத்தனிக்க முடியுமா, அதுபோல் நிலங்களின் விளைவு குறையாமல் செய்து சர்க்கார் ரிவினியூவைச் சுலபமாய்ச்செலுத்தும்படி செய்வது உத்தமமல்லவா.

இக்கக் கிராமத்தில் சென்ற முப்பது வருஷகாலமாக வாய்க்கால், கண்ணிகள் வெட்டும் விஷயமாக அனேக மாதிரியாய்ப்பலபேர்கள் பல தடவைகளில் முயற்சிசெய்தும் ஒன்றும் பிரயோஜனப் படவில்லை.

சில வருஷங்களுக்கு முன் இவ்வூர் 3, 4, சேத்திகளில் ரிஜிஸ்டர் செய்யப்படாமலே பரீட்சார்த்தமாக ஐக்கிய முறைப்படி கூட்டுறவு ஜலபாய்ச்சல் சங்கமொன்று ஏற்பட்டு ஒரு வருஷம் வரையில் நடந்ததில் அதின் பிரயோஜனம் எல்லாருக்கும் நன்றாய் தெரியும்படி செய்யப்பட்டது. அப்படியிருந்தும் அது ரிஜிஸ்டராகும் முன்னிலையில் சில துர்யோஜனையுள்ளவர்களால் ரிஜிஸ்டர் செய்வது தடைப்பட்டுவிட்டது. கடைசியாய்ச் சென்ற 10-11-23ல் பாபநாசத்தில் கூடிய மிலட்டூர் கோவாப்ரேட்டிவ் சூபர்வைசிங் யூனியன் மகாசபை மீட்டிங்கில் மகா-௱-௱-ஸ்ரீ T. L. சுப்பையர் அவர்கள் B. A. B. L. ஜலபாய்ச்சல் வசதி கவனிக்கப்படாததினால் ஜனங்களுக்கும் குடிகளுக்கும் ஏற்படும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் வந்திருந்த ஜனங்களின் மனதில் நன்றாய்ப் படும்படி உபன்னியாசம் செய்ததின்பேரிலும் மீட்டிங்குக்கு விஜயம் செய்திருந்த தஞ்சாவூர் கோவாப்ரேடிவ் அஸிஸ்டெண்டுரிஜிஸ்டார்மகா-௱-ஸ்ரீ O. N. ரமசுவாமி அய்யர் அவர்கள் M. A. இவ்வூரில் ஒரு கூட்டுறவு ஜல்பாய்ச்சல் சங்கம் ஒன்று ஏற்படுத்தி ரிஜிஸ்டர் செய்து தரும்படிக்கும் சகஜமாய் வரிகொடாதவர்களிடம் வரிவசூல்செய்து கொடுக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டு அவர்கள் பூரா உதவியும் செய்து கொடுப்பதாய்வாக்கும் கொடுத்ததின்பேரிலும் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது.

இச்சங்கம் நன்றாக வேலை செய்து மிராசுதார்களும் லாபத்தை யடைந்தால் ரிவினியூ டிபார்ட்மெண்டாருக்கும் கிஸ்தி சிரமமன்னியில் வசூலாகும். கிஸ்தி வசூல் சிரமம் குறைவதற்காகவே இச்சங்கத்தில் சேராதவர்களுடைய வரியை வசூலித்துக் கொடுக்க ரிவினியூ டிபார்ட்மெண்டார் முன்வரவேண்டும்.

இன்கம்டாக்ஸ் தாசில்தார் களிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டபடியால் இது விஷயத்தில் அதிக சிரத்தையுடன் கவனிக்க தாசில்தார்களுக்குஅதிக அவகாசம் இருக்குமென்று நினைக்கிறேன்.

மிராசுதார்களே! நீங்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு ஜலபாய்ச்சல் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலமாக வாய்க்கால் வெட்டு வேலையைச்சரிவரச்செய்து எப்போதும் க்ஷேமமடைய வழிகாட்டவேண்டும்.

## தற்காலக் கல்வி.

(ஸ்ரீமான்ஜி. எம். இராமஸ்வாமி ஐயர். புத்தகரம்.)

முன் ஒரு வியாசத்தில் கிராமங்கள் எப்படி சீர்கெட்டு விட்டதென்பதை எழுதினேன். இந்த வியாசத்தில் படிப்பு எப்படியாயிற்று என்று கொஞ்சம ஆராய்வோம். நமது சிறுவர்களுக்குச் சுமார் 5 வயதிலிருந்து புதிது புதிதாகச் சாமான்களைப் பார்ப்பதிலும் அறிவதிலும் ஒருவித உத்

ஸாகமும் ஆவலும் ஏற்படுகிறது. அதிலிருந்து நல்லதோ கெட்டதோ எதைஅறிகிறார்களோ அல்லதுபார்க்கிறார்களோ அது அவர்களுடையமனதில் பதிந்து சாகுமளவும் வேரூன்றி விடுகிறது. அப்போதிலிருந்தே பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். இப்போது பாரதநாட்டை ஆளும் ஆங்கிலத்தார் இந்தியாவில் வேரூன்றுவதற்கு முன், மேலே சொல்லிய விஷயத்தை அறிந்த நமது முன்னோர்கள் அதற்கனுகுணமான கல்வியையும் வழக்கத்தையும் கொடுத்து வந்தார்கள். "அரிது அரிது மானிடராத லரிது" என்பதுபோல் அடையக்கூடிய எல்லாவற்றிலும் சிறந்த மானிட ஜன்மத்தை அடைந்தகருத்தையுணர்ந்து அவன் செய்யவேண்டிய கருமத்திற்கு வேண்டிய சத்தியம், சாந்தம், அஹிம்ஸை, தயை, தர்மம் முதலிய உயர்ந்த குணங்கள் அடையவேண்டி நல்ல குருவைத்தேடி அவரிடம் ஒப்படைத்து மேன்மையுறச் செய்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் நமது தேசத்தில் மலிந்து எங்கும் கிராமந்தோறும் கல்விச்சாலையும் குருகுலமும் நிலவி இருந்தன. ஆகையால் இந்தியாவில் சத்தியமும் தர்மமும் தயையும் தாண்டவமாடிற்று. ஆதலால் பஞ்சமோ வியாதியோ கொலை களவு திருட்டு முதலியனவோ இல்லாமல் சுபிக்ஷமாய் இருந்து வந்தது. ஆனால் சுமார் 50 வருஷத்திலிருந்து எல்லாம் வரவரக் குறைந்து சமீபத்தில் லார்டு கர்ஸானுடைய கிட்டத்தினால் எல்லாம் அழிந்து மானிடருக்குகந்த குணமே தற்போதைய ஜனங்களிடம் இல்லாமல் தற்காலத்திய படிப்புச் செய்துவிட்டது. இப்போது ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் தனது வயிற்றை நிரப்பினால் போதும் என்கிற எண்ணத்தைத் தவிர வேறு அறியக்கூடிய சக்தியற்றவர்களாய் விட்டார்கள்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தாம் எங்கிருந்து வந்தோம்? எதற்காக இங்கு இருக்கிறோம்? பிறகு எங்கு போகப்போகிறோம்! என்பதை அவசியம் அறிய வேண்டும். அப்படி அறியக்கூடிய படிப்புத்தான் முன் கற்றுவந்தார்கள். இப்போது தனது வயிற்றை நிரப்புவதற்குஎன்ன செய்யலாம் என்கிற ஒரேவித எண்ணத்தைத் தவிர வேறு அறியக்கூடிய சக்தியில்லை. "அன்ன விசாரம் அதுவே விசாரம்" "சொர்ண விசாரம் தொலையா விசாரம்" என்பது போல் அதைத் தவிர வேறு சிந்திப்பதற்கேசக்தியற்றவர்களாய்ப் போய்விட்டார்கள். மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் அவயவவித்யாசத்தைத்தவிர வேறொன்றும் இல்லாமல் இருக்கிறது. மிருகங்களும் தனக்கும் தனது கன்றுகளுக்கும் ஆகாரம் சேகரிக்கவும் சாப்பிடவும் தூங்கவும் செய்கிறது. தற்கால மனிதர்களும் அந்தஸ்திதிக்குவந்துவிடத்தற்காலப் படிப்புச் செய்து இருக்கிறது. அதற்கு திருஷ்டாந்தமாகச்சர்க்கார்ஊழியத்திலிருப்பவன்தள்ளப்பட்டாலோ தள்ளப்படமுயற்சி யடைந்தாலோ அவன் பாட்டைப் பார்த்தால் புலனாகும். ஏனெனில் அதிலிருந்து விடுபட்டால் தனதும் தனது குடும்பத்தின் வயிற்றையும் எப்படி நிரப்பக்கூடும் என்கிற கவலையானது அவனைச் சூழ்ந்துகொண்டு உயிருடன் கொன்றுவிடுகிறது. இந்தியாவின் ஜனத்தொகை என்ன? அதில் எவ்வளவு பெயர் சர்க்கார் ஊழியம் செய்து ஜீவிக்கிறார்கள்? சர்க்கார் ஊழியம் செய்யாமல் இருப்பவர்கள் சாப்பிடாமலும் சுகத்தை அனுபவிக்காமலுமா இருக்கிறார்கள். என்பதைக்கூட அறிய சக்தியற்றதாய்த்தற்காலப் படிப்புச் செய்து விட்டிருக்கிறது "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்பதை அறிந்தால் இவ்வளவு கவலைப்படவேண்டியதில்லை. ஆகையால் இந்த அவிவேகத்தைப்போக்கிநமது சிறுவர்களுக்கு நல்ல எண்ணமும் நல்ல குணமும் நல்ல செய்கையும் உண்டாகத் தேசிய வழியில் படிப்புச்சொல்லிக்கொடுக்க வழிதேடவேண்டும். உத்தியோக ஆசையும் அதில் பெருமையும் மனதில் இருக்கும் வரையில் ஆத்ம ஞானமும், சத்தியம், தர்மம்; சாந்தம், தயை முதலிய மானிடருக்குரிய அரிய குணங்கள் அடையத் தேசிய வழியில் இறங்க நமது ஜனங்களுக்கு மனது



வராது. கல்லெல்லாம் மாணிக்கமாகாதது போல் சட்டம் படித்தவர்கள் எல்லாம் ஸ்ரீஜத் தாஸைப் போல் சம்பாதிக்க முடியாது. ஆனால் தேசியவழியில் படித்தால் மேற் காட்டிய குணங்களை எல்லாரும் சுலபமாய் அடையமுடியும். மேல்கண்ட குணங்கள் எல்லாம் ஏற்பட்டால் இப்போது தேசத்தில் தாண்டவமாடும் வியாதிகளும் பஞ்சங்களும் துர்ப்பிக்ஷங்களும் தானாக மறைந்துவிடும். ஸ்ரீமான் தாஸைப்போல் எல்லாரும் சம்பாதிக்க முடிந்தாலும் எல்லாக்கஷ்டத்தையும் போக்க முடிந்தாலும் தற்காலத்திய புதிய புதிய வியாதிகளை நமது நாட்டிலிருந்து ஓட்டமுடியாது. பழயகால சம்பிரதாயப்படி நமது குழந்தைகளைக்குருகுலம்உண்டாக்கி அதில் படிக்கும்படி செய்தால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதுபோல் நோயற்ற வாழ்வும் நமது நாட்டுக்கஷ்டமும் தொலையும். இப்போது உள்ளபடி காலை 8 மணி வரையில் தூங்குவதும்பிறகுகுளித்துவிட்டுசென்றநாள் கட்டிக் கழிந்த வேஷ்டி சட்டைகளைப் போட்டுக்கொண்டும், மாலை 5 மணி வரையிலும் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்காமலும், பல யோஜனைகளையும் விசாலமான எண்ணங்களையும் கட்டிப்போட்ட மாதிரி பள்ளிக்கூடத்தில் உருப்போடுவதினால் தேசத்திற்கோ, சமூகத்திற்கோ, தனக்கோ நன்மை ஏற்படாது. ஆனால் காலை 5 மணிக்கு எழுந்திருந்து காலைக்கடன்களைமுடித்துக்கொண்டு திறந்த வெளியில் ஓடி ஆடி இயற்கைப் பொருள்களைப் பார்த்து நமது முன்னோர்களில் வீரர்களாயும் சத்தியவந்தர்களாயும் ஏதாவது ஒருநீதியைப் புகட்டக் கூடியவர்களுடைய சரித்திரங்களாயும் உள்ளவைகளைப்படித்தால் நமதுநாட்டுக்கும்தனக்கும் சுகம் உண்டாகும் நமது முன்னோர்கள் சரித்திரங்களில் ராமன், கிருஷ்ணன், ஹரிச்சந்திரன், குமணன் போன்ற சரித்திரங்களில் உள்ள நீதிகளுக்கும் தற்போதைய நெப்போலியன், லார்டு க்ளைவ், நெல்சன் முதலிய சரித்திரங்களுக்குமுள்ள வித்தியாசத்தை நேயர்களே தெரிந்துகொள்ளட்டும். பழயகால மாதிரியுள்ள படிப்புகளையும்பழக்க வழக்கங்களையும் சிறந்ததென்று தற்காலமுள்ள ஆங்கிலம் படித்தவர்களும் ஆங்கிலஅதிகாரிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள், திறந்த வெளியில் நல்ல காற்று ஓட்டமுள்ளஇடங்களில்ஓடிஆடி இயற்கை அழகைப் பார்த்துப் படிப்பதால் தேக ஆரோக்யமும்நல்ல அறிவும் தேகதிடமும்ஏற்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் அந்த வழியில் படிப்பு விருத்தி செய்வதால் தங்களுக்கு இந்தியாவில் வேலையில்லாமல் போய்விடுமோவென்கிற கவலை போலும்.

ஆனால் நமது முன்னோர்களைப்போல் ஆங்கில அதிகாரி வர்க்கத்தாரும் முன் யோஜனையாய் இருக்கலாம். ஆனால் இருவருக்கும் வழிவேறு. நமது முன்னோர்கள் தாங்களும் மற்றவர்களும் தேசமும் ஜாதியும் சுபிக்ஷமாயிருக்க வேண்டுமென்று விரும்பி அதற்கு அனுகுணமான படிப்பைக் கற்றுகொடுத்தார்கள். ஆனால் அரசாங்கத்தாரோ அதற்கு மாறாகத் தாங்கள் மாத்திரம் எஜமானர்களாய் எப்போதும் இருக்கவேண்டும் என்றும், இந்தியர்கள் எப்போதும் தங்களுக்கு அடிமையாய் ஊழியம் செய்துவர வேண்டுமென்றும் நினைத்து அதற்குகந்த படிப்புக் கொடுக்கிறார்கள். அதற்கு திருஷ்டாந்தம் சமீபத்தில் நடந்த சென்னைச்சட்டசபையில் லீ கமிஷன் யாதாஸ்து விவாதத்தின்போது ஸ்ரீமான் வீரய்யன் சொன்ன பதிலினால் நமது அடிமைப்புத்தி நிலை நாட்டப்பட்டிருக்கிறதென்பது நிதர்சனமாகிறது. இந்த அடிமைப்புத்தியை விரட்டி சுதந்திரப் புத்தியை எல்லா ஜனங்களுக்கும் உண்டாக்க நமது நாட்டுக்கு சுயராஜ்யமில்லாமல் முடியாது. ஆனால் சுயராஜ்யம் நாளையே கிடைத்து விடாது. ஹானியையே விளைவிக்கும் நமது தற்காலப் படிப்பை ஒழித்துவிட வேண்டும். இந்த நிலைமையில்நாம் செய்யக்கூடியது தான் என்ன? எங்கெங்கு பழய குருகுலங்கள் உண்டாக்க முடியுமோ எவ்வளவு வரையில் பையன்களை அதில் படிக்க வைக்கமுடியுமோ அதைச் செய்யவேண்டும். அதோடு ஒவ

வொரு தாய் தந்தையும் சுலபமாய் செய்யக்கூடிய அடியில் கண்ட காரியத்தையாவது நாம் செய்து வந்தால் நமது பிள்ளைகளுக்கு நம்மைவிட தேசீய உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் உண்டாவதுடன் நோயற்றும் இருப்பார்கள். ஒவ்வொரு பையன்களையும் 5 மணிக்கே அவசியம் எழுப்பிவிடவேண்டும்; முகம் கழுவிக்கொண்டு ஈஸ்வரப் பிரார்த்தனை செய்யும்படி கற்பிக்க வேண்டும்; வெளிவாசல்போய் வந்தபிறகு ஸ்நானம் செய்யச்சொல்ல வேண்டும்; ஈஸ்வரபூஜைக்குப் புஷ்பம் கொண்டு வரும்படி செய்யவேண்டும்; (எல்லாஜாதியாருமே) பிறகு காலை ஆகாரம் செய்துவிட்டுத்தன்து படிப்புப்புஸ்தகங்களைப்படிக்கச்சொல்லவேண்டும்; மாலை 5 மணிமுதல் 6 மணி வரையில் காவேரி குளம் முதலிய இடத்திற்குக் கொஞ்சம் போய் வந்து மறுபடி நீதி புகட்டக்கூடியசரித்திரங்களைப் படிக்கச் செய்யவேண்டும்; 8 மணிக்குள் ஆகாரம் முடித்துக்கொண்டு மறுபடி ஈஸ்வரஸ்தோத்திரம் சொல்லும்படி செய்யவேண்டும்; 10 வயதுக்குள்பட்டவர்கள் $8\frac{1}{2}$ மணிக்குள்ளும் 20 வயதுக்குள்பட்டவர்கள் 9 மணிக்குள்ளும் படுத்துக் கொள்ள வேண்டும்; இப்படி ஒரே நியதியாய் செய்துவருவதால் தற்காலப்படிப்பில் உண்டாகக்கூடிய மேன்மையைக் காட்டிலும் நூறு மடங்கு நன்மை யுண்டாகும். இதிலிருந்து காரியம் செய்வதிலும் ஆகாரம் சாப்பிடுவதிலும் ஒரு நியதியினால் தேகத்திற்கு ஆரோக்கியமும் ஈஸ்வரப்பிரார்த்தனையால் அறிவும் ஈஸ்வர கிருபையும் காலையில் ஸ்நானம் செய்வதினால் நோயற்ற வாழ்வும் முன்னோர்கள் சரித்திரம் படிப்பதால் தேசாபிமானமும் மதாபிமானமும் நீதி அறிவு முதலியவும் உண்டாகி மேன்மையடைவார்கள்.

சுபம்!


Krishna Chalk works,

*PANCHASHARA AGRAHARAM,*

KUMBAKONAM.

சுதேச கைத்தொழிலை ஆதரியுங்கள்.

இந்த வொர்க்ஸில் ஸ்கூல்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டிய வெள்ளைச் சாக்பீஸ்களும் கலர்ச் சாக்பீஸ்களும் (Dry) டிரை கலர் பாக்ஸ்களும் ஆயில் கலர் பாக்ஸ்களும் சிலேட் பென்ஸல்களும் மிக கீர்த்தியாக யந்திரங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டு வருகிறது. காலேஜ், ஹைஸ்கூல், போர்ட்ஸ்கூல், முனிசிபல் ஸ்கூல், பிரைமெரி ஸ்கூல் முதலிய பல கல்வி ஸ்தாபனங்களுக்குச் சப்ளை செய்து நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

அயல்நாட்டுச் சாக்குகளைவிட மேலானது. கூடிய சீக்கிரத்தில் குரூஸிபிள்ஸ்களும் (குகைகள்) பிளாக்லெட் பென்ஸல்களும் காப்பியிங் பென்ஸல்களும் நல்ல தினுசாகத் தயார் செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை! வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விலை விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

கிருஷ்ண சாக் வொர்க்ஸ்,

பஞ்சாக்ஷர அக்கிரஹாரம்,

கும்பகோணம்.




223465

# தென் இந்தியக் கோயில்கள்.

## மஹாபலிபுரம்.

(ஸ்ரீமான் P.V. ஜெகதீச ஐயர், சூப்பரின்டென்டெண்டு, ஆர்கலாஜிகல் டிபார்ட்மெண்டு, சென்னை.)

(Copy Right.)

—(0)—

கடன்மல்லை, மாவலிபுரம், மல்லபுரம், மாமல்லபுரம், மஹாமல்லபுரம், மஹாபலிபுரம் எனபலபெயர்களால் வழங்கும் இந்த க்ஷேத்திரம் சென்னப்பட்டணத்திற்கு முப்பத்தைந்து மைல் தூரம் தெற்கில் ஸமுத்திரக்கரையிலுள்ளது. இவ்விடம் கற்பாறையில் ஏழாவது நூற்றாண்டு முதல் தொண்டைமண்டலத்தை அரசுபுரிந்த பல்லவ ராஜாக்களால் வெட்டிவைக்கப்பட்ட பல அபூர்வ சித்திரங்களிருந்து வருகின்றன. பல்லவர்கள் இவ்வூரைக் கைக்கொள்ளுவதற்கு முன் சோழராஜாக்கள் இவ்விடத்தை ராஜதானியாகக் கொண்டிருந்ததாகப் புராணங்களால் வெளியாகிறது. இவ்வூருக்குச் சென்னையிலிருந்து பக்கிங்காம் துரையால் வெட்டப்பட்டு அவரது பெயராலேயே "பக்கிங்காம் கால்வாய்" என வழங்கும். ஆற்றின் வழியாய்ச் சுலபமாய்ப் படகில் செல்லலாம். அல்லது சென்னையிலிருந்து தென் இந்திய இருப்புப் பாதையில் செங்கற்பட்டு போய் அவ்விடமிருந்து தென்கிழக்காய்ப் பக்ஷிதீர்த்த மெனப்படும் திருக்கழுக்குன்றம் மார்க்கமாய் இருபது மைல் தூரம் வண்டியில் செல்லலாம்.

### ஏழு கோயில்.

ஐரோப்பியர்கள் இவ்வூரை ஏழு கோயிலென்று சொல்லுகிறார்கள். இவ்விதம் இவர்கள் இவ்வூருக்குப் பெயரிட்டது ஸமுத்திரத்தில் இந்தப்பக்கம் கப்பலில் வரும்போது தூரத்திலிருந்து ஏழுகோபுரச் சிகரங்கள் தெரிந்ததிலிருந்து இப்பெயர் கொடுத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

### மற்றப் பெயர்கள்.

ஏழாவது நூற்றாண்டில் தொண்டைமண்டலத்தை ஆண்ட முதலாவது நரஸிம்மவர்மன் இங்குள்ள குகைக்கோயில்களை வெட்டிவித்தான். இவனுக்கு "மஹாமல்ல" னென்று பட்டப்பெயர் ஏற்பட்டதிலிருந்து இவ்வூருக்கு மஹாமல்லபுரமெனப் பெயருண்டாயிருக்கலாம்.

தமிழ் கிரந்தங்களில் கடன்மல்லை, மாவலிபுரம் என்னும் பெயர்களாலேயே இவ்வூர் வழங்கி வருகிறது. இது புராதனகாலங்களில் ஒரு முக்கிய துறைமுகமாயிருந்திருக்கவேண்டும். பூதத்தாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இவ்வூரிலுள்ள பெருமாளைக்கடல்மல்லைஸ்தலசயனரென்றே பாடியிருக்கிறார்கள்.

### கடற்கரைக் கோயில்.

தற்காலம் அலைகளால் மோதப்படுவதும் அதனாலேயே கடற்கரைக் கோயிலெனப்படும் பெயருள்ளதுமான கோவிலில் சிவன், விஷ்ணு இந்த இரண்டு மூர்த்திகளுமிருந்து வருகிறார்கள். த்வஜஸ்தம்பம் பலிபீடம் முதலியவைகள் கிழக்கிலுள்ளவைகள் ஸமுத்திரத்தின் ஜலத்திலிருந்து வருகின்றன. இக்கோயில் ஒன்று மட்டும் தான் கட்டுக்கோயில். மற்றவைகள் பாறையிலேயே வெட்டப்பட்டிருக்கின்றன. மேல்புறமுள்ள கோயிலின் கட்டிடங்கள் மணலால் மூடப்பட்டிருந்தவைகள் இப்பொழுது வெளியே விளங்குகின்றன.

### சிற்பவேலைகள்

"அர்ஜுனன் தபசு" எனப்படும் சிலா பிம்பங்கள் வெகு அழகாய் ஒரே கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றன. இதன் சமீபத்தில் "கோவர்த்தன உத்தார கிருஷ்ண" னது லீலைகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கிருஷ்ணன் மலையைத் தூக்கிக் குடைபிடிப்பதும் அதனடியில் மாடு கன்றுகள் இடையர் இடைச்சிகளுடன் தங்கியிருப்பதும் வெகு அழகாய்க் காட்டப்பட்டிருக்

223465

கின்றன. அதன் தெற்கில் மஹிஷாசுரமர்த்தினி சிலை ஒரு குகையில் செதுக்கப்பட்டிருப்பதுடன் வராகஸ்வாமி பூமி பிராட்டியாரைக் கையிலெடுத்திருக்கும் மாதிரி அடுத்த குகையில் விளங்குகிறார்கள். இக்குகையின் தென் சுவரில் ராஜஸிம்மன், மஹேந்திரவர்மன் இவ்விருபல்லவ ராஜாக்களும் சிலாரூபமாய் தங்களதுபத்னிகளுடன் இருந்து வருகிறார்கள். இவ்வூரின் தென்கோடியில் சிலகோயில்களும் நந்தி, யானைகளும் பாறையிலேயே வெகுஅழகாய்ச்செதுக்கப்பட்டிருக்கின்றன.

புராணவரலாறு.

புண்டரீக மஹரிஷி பூமியிலுள்ள திவ்ய தேசங்களெல்லாம் சென்று அவ்விடங்களிலுள்ள மூர்த்திகளை ஆராதித்துக்கொண்டு வருகையில் திருவிடந்தையில் குடிகொண்டிருக்கும் வராஹ மூர்த்தியைத் தரிசித்த பின்னர் அதற்குத் தென் திசையிலுள்ள ஆரண்யத்தின் வழியாய் போய்க்கொண்டிருக்கையில் பல சுபசகுனங்களைக் கண்டார். இப்படி நேரிட்டது மஹா விஷ்ணுவின் கருணையென்று திருப்தி அடைந்து தெற்குநோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவ்விடம் பல விருக்ஷங்களால் அடர்ந்து, குளிர்ந்த நிழலைக்கொடுக்கும் ஒரு உத்தியானவனத்தில் விஷ்ணு சர்மா என்னும் பிராம்மணர் இம்மஹரிஷியை உபசரித்தார். அவ்விடமிருந்து சற்று தெற்கே போய்ப் பார்க்கையில் ஏராளமான தாமரைமலர்களால் அடர்ந்த ஒரு புஷ்கரணியைக் கண்டார். அதிலுள்ள புஷ்பங்களை யெல்லாம் எடுத்து ஸ்ரீமந் நாராயணனுக்கு அர்ப்பணம் செய்யஆசைகொண்டார். இந்த பக்தியை வியந்த பகவான் தாம் இவரிடம் உடனே ஆவிர்பவித்து இம்மஹரிஷியை அனுக்கிரஹிக்கவேண்டி இவருக்கென்று ஒரு அவதாரமெடுத்து அவ்விடம் தோன்றிஅவர் விசேஷபக்தியுடன் எடுத்ததாமரைப்புஷ்பங்களைச் சாத்திக்கொள்ள எண்ணங்கொண்டார். அத்தருணத்தில் அக்குளத்திலுள்ள ஒரு முதலை அதனது நாக்கு அறுபட்டு மூர்ச்சித்து மிதந்ததைக் கண்டு பரிதாபம் கொண்டு இம்மஹரிஷி அதை கடாக்ஷித்தார். உடனே முதலை மூர்ச்சை தெளிந்து தனது முந்தின ஜன்மத்தின் விருத்தாந்தங்களை ரிஷிக்குச்சொல்ல ஆரம்பித்தது.

மல்லாபுரத்தில் அம்முதலை தனது முன்ஜன்மத்தில் ஒரு ராஜாவாக இருந்து அச்சமயம் ஏராளமான தானதர்மங்களைச் செய்து கொண்டிருந்ததாகவும் அம்மல்லாபுரம் அப்புஷ்கரணிக்குத்தெற்கில் ஒரு குரோச தூரத்தில் இரண்டு யோசனை நீளமும் அரை யோசனை அகலமும் உள்ளதாய்ப் புண்ணிய நகரம் என்று விளங்கியதாகவும் சொல்லிற்று. தனக்கு ஹரிப்பிரியன் என்னும் பெயர் ஏற்பட்டிருந்ததாகவும் தனது புத்திரன் மல்லேசுவரன் என்றும் சதாநந்தன் என்னும் பெயருடன் அப்பொழுது அவ்வூரை ஆண்டுகொண்டிருப்பதாகவும் தெரிவித்தது. பின்னர் அவ்விடம் வராஹ மூர்த்தி ஆவிர்பவித்ததின் விவரத்தை அடியில் கண்டவாறு வெளியிட்டது.

நெடுநாளைக்குமுன் அந்நகரை ஹரிசேகர மன்னன் ஆண்டுவருகையில் அதற்கு வடக்கில் ஒரு யோஜனை தூரத்திலுள்ள வராஹ க்ஷேத்திரமான திருவிடந்தைக்குத் தன் தாயாருடன் தினந்தோறும் அவ்விடம்சென்று உச்சிகாலத்தில் பகவானைச்சேவித்துப்பின்னர் தமது அரண்மனைக்குத் திரும்பி பிராம்மணர்களுக்குப் போஜனமளித்துத் தான் சாப்பிடுவது வழக்கம். இந்த ராஜனதுபக்தியைச் சோதிக்க பகவான் தாமே ஒரு விருத்த பிராம்மண வேஷத்துடன் இவர் திருவிடந்தைக்குப் புறப்படும் சமயத்தில் வலதுகையில், பூதேவியைச் சிறுபெண்ணாகப் பிடித்துக்கொண்டு தோன்றி அதிகபசியால் வருந்துவதாகவும் உடனே ஆகாரமளிக்காவிட்டால் பிராணஹானி நேரிடக் கூடுமென்றும் தெரிவித்தார். இதைக் கேட்டு தடியூன்றிக்கொண்டு பசியால் வருந்தும் பிராம்மணரையே திருவிடந்தையிலுள்ள வராஹ மூர்த்தியாகப்பாவனைசெய்துகொண்டுஅவருக்குச் சாப்பாடு செய்வித்தார். சாப்பாடு முடிந்ததும் அரண்மனை வாசலில் காத்திருக்கும் எல்லா பிராம்மணர்களும் அவரவர்கள்வயிறு நிரம்பித் தாங்கள் பூரா ஆகாரம் உட்கொண்டமாதிரி திருப்தியடைந்த பெருமையைத் தெரிவிக்க ராஜா அதிசயித்து இவரே தமது குலதெய்வமென்று கூறி, எப்பொழுதும் அவ்விடத்திலேயே ஸாந்நித்தியமாகவிருக்கப் பிரார்த்தித்தனர். பகவானும் அவ்விடத்திற்கு மேற்கில் ஐந்து யோஜனை தூரத்திலுள்ள ஹஸ்திகிரியில் (காஞ்சி) பிர்மமா செய்யப்போகும் யாகத்திற்கு வைகுண்டத்திலிருந்து தமக்குப் புண்ணிய கோடி விமானம் வரப்போவதால் அதற்காக அத்திக்கு நோக்கி சேவையளிப்பதாக வெளியிட்டார். இதன் நிமித்தியமே இவ்விடம் வராஹ மூர்த்தி மேற்குப் பார்த்து விளங்குகிறார். இந்த மூர்த்தியை அந்த ஹரிசேகர மஹாராஜாவின் முதல் தற்காலமுள்ள தனது புத்திரனுள்பட ஆராதித்துவந்தாலும் தன்காலத்தில் ஒருபுருஷன் தன் ஆகாரத்திற்கு வேண்டிய அளவு அன்னத்தை ஆமரூபமாய்த்தனக்குதினந்தோறு மளிக்கவேண்ட அதை அலட்சியம் செய்து நான் மறுத்ததாகவும் அதன் காரணமாக இம் முதலை ரூபமாகத்தான் சாபமடைந்ததாகவும் அப்பொழுது அம்மஹரிஷியின் அனுக்ரஹத்தால்மோக்ஷமடைந்ததும் தெரிவித்தது.

பின்னர் இப்புண்டரீகர் வைகுண்டம்சென்று தாம் எடுத்த தாமரைப்புஷ்பங்களை மஹாவிஷ்ணுவுக்கு ஸமர்ப்பிக்கவேண்டி ஸமுத்திரத்திலுள்ள ஜலத்தை இறைத்து உயர்ந்த கரையைக் கட்டி கடலிலிறங்கி மேற்கு முகமாய் நின்றுகொண்டு ஜலத்தை இறைத்தார். இங்கு சிரமப்படும் பக்தனைக் காப்பாற்ற வேண்டி ஒரு விருத்த பிராம்மணர் வேஷம்பூண்டு மஹாவிஷ்ணு இவர் முன்பு தோன்றி அவருக்கு ஒத்தாசை புரிவதுபோல் நடித்துத் தமது ஒரு கையால் ஜலத்தை வாரியிறைத்ததும் கடல் ஒரு குரோசதூரம் ஒதுங்கிவிட்டது. உடனே அக்கரையிலேயே கிழக்கு முகமாய் வலது புஜத்தைத் தலையின் கீழ்வைத்துக்கொண்டு பூமியிலேயே சயனித்து பகவான் இம்மஹரிஷி எடுத்து வைத்திருக்கும் புஷ்பங்களையும் சாத்தச் செய்து திருப்தி அடைந்து புண்டரீகருக்கு மோக்ஷமளித்தார். ஆனது பற்றியே இம்மூர்த்திக்கு ஸ்தலசயனரெனப் பெயருண்டாயிற்று.

இந்திரனும் பிரதி வருஷம் சைத்திர மாசத்தில் விசாக நக்ஷத்திரத்தன்று அவ்விடம் வந்து பகவானைப் பூஜித்துப் போகும் வரம் பெற்றான். சதாநந்தராஜனும் இப்பெருமைகளைக் கொண்டு தன் பிதா முதலை ரூபமாயிருந்து மோக்ஷமடைந்ததைக் கேட்டு அப்புஷ்கரணியில் தர்ப்பணம் தானம் முதலியவைகளைச்செய்து பலபிராம்மணர்களுக்கு பூதானம் செய்து பின்னர் ஸ்தலசயனப் பெருமாளுக்குக் கோயில் முதலிய கட்டிடங்கள் ஏற்படுத்தினான். அகஸ்திய ரிஷியும் இப்பெருமையைக்கேட்டு இவ்விடம் வந்து இப்பெருமானை ஆராதித்திருக்கிறார். கங்காதேவியும் ஆறுரூபத்துடன் இவ்விடம் வந்து பகவானை வேண்டித் தவம்புரிந்திருக்கிறாள். கருடனும் தான் ஒரு ஸமயம் இழந்த சிறகுகளை இங்குள்ள பெருமானை ஆராதித்துத் திரும்பவும் பெற்றுத்திருப்தி அடைந்தான்.

---

மன்னார்குடி தாலூகா
கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின்
தீர்மானம்.

கிராம உத்தியோகஸ்தர்களின் நலத்தைக் கருதி மகா-௱-௱-ஸ்ரீ N. ஆபத்ஸகாய ஐயர் அவர்களால்நடத்தப்படுகிற "கிராமானுகூலன்" என்னும் பத்திரிகையை எல்லா கிராம உத்தியோகஸ்தர்களும் ஆதரிக்க வேணுமாய் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

நன்னிலம் தாலூகா
கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின்
தீர்மானம்.

கும்பகோணத்தில்பிரசுரமாகும் 'கிராமானுகூலன்' என்னும் மாதாந்திரப் பத்திரிகையானது, கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மையைக் கருதியிருப்பதால் அப்பத்திரிகையை ஆதரிக்கும்படி எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இம்மீட்டிங் சிபார்சு செய்கிறது.

உ

அழகும் பெருமையும் அமையப்பெற்றது.

பாரதமாதா பாதம் துணையாகும்.

பொருளும், திருளும் பொருந்த உற்றது.

# பாரதி வெள்ளி பவுண்டன் பேனா.

ஐயன்மீர்!

நமது தாய்நாட்டின் கல்வியும், செல்வமும், கைத்தொழிலும் பண்டுள நிலைக்குன்றினதாகி இருந்த திவவிட்மெனில் மறைந்திடுமோவென ஏக்கமுற்ற இக்காலத்தில் நம் சகோதரர்களிற் பலர் தூக்கம் விடுத்து, ஊக்கமடைந்து, பற்பல துறைகளிலும் முற்பட்டு முயன்றுவருவது வெளிப்படை.

ஆகவே, தாய்நாட்டின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்வோமானால், அதனால் பொருளாதாரம் நிலைபெருமென்பது துணிபாம்.

எனவே, ஓர்விதசேர்க்கை அறக்கினால் அன்னிய நாட்டிலிருந்து செய்தனுப்பம் பவுண்டன் பேனாவை நம்மில் பலரும் வாங்கி உபயோகிப்பதை எண்ணி நம் நாட்டில் மிக்க கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு நல்ல வெள்ளியினால் மிக அழகாக பவுண்டன்பேனா செய்து "பாரதி" என்னும் விலாசமிட்டுப் பவுன் நிப்புடன் இரிடியம் துவைத்துகுறைந்தவிலைக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

நீண்டநாள் இந்தப் பேனாவை உபயோகித்தபின் நசுங்கியோ மற்ற எந்தவிதத்தினாலும், கெட்டுவிட்டாலும், மற்ற அன்னிய நாட்டு அறக்கு பேனாக்களைப்போல் எறிந்துவிடக் கூடியதல்ல. அப்போது அதிலுள்ள வெள்ளி, பொன் தங்களுக்கு லாபகரமாகக் கிடைக்கும்.

இதை ஒருமுறை வாங்கி உபயோகிக்கும் சகோதரர்கள் மறுமுறை இதைத்தவிர வேறு பேனாக்களை வாங்கமாட்டார்களென்பது திண்ணம். ஆகையால் ஆர்டருக்கு முந்துங்கள்!

| | | ரூ அ பை |
|---|---|---|
| பூரா வெள்ளி | 14ct தங்கநிப் இரிடியம் துவைத்தது மைபோடும் குழாய் பெட்டியுடன் | 10—8—0 |
| வெள்ளி | தனி நடுபாகம் (Barrel) | 3—0—0 |
| ,, | தனி முன்பாகம் (Mouth piece) | 3—0—0 |
| ,, | தனி மூடி (Cap) | 2—0—0 |
| ,, | தனி பீடர் (Feed Bar) | 1—0—0 |
| ,, | தனி 14ct தங்கநிப் இரிடியம் துவைத்தது | 2-12—0 |
| ,, | ஷை இரிடியம் துவைக்காதது | I-12—0 |
| ,, | தனிகிளிப் (Clip) | 1—4—0 |

இப்படிக்கு,
தங்களன்புள்ள ஆர்டரை எதிர்பார்க்கும்:—

**K. G. R. & Co.,**

திருவாலூர்.



# பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும்,

(ஒரு பாங்க் காஷியர் எழுதுகிறார்.)

(136-வது பக்கம் தொடர்ச்சி.)

எப்படிவியாபாரிகள் தாங்கள்வியாபாரம் செய்யும் சரக்குகளுக்குக் கிராக்கி வரும் சமயத்தில் அதிக லாபம் சம்பாதிப்பதை உத்தேசித்து அதிகசசரக்கு வாங்கிச் சேகரித்துக் கொள்வார்களோ, அதே மாதிரி பாங்கர்களும் பணத்திற்குக்கிராக்கி வருங் காலங்களில் சாதாரண நாட்களில் கொடுப்பவை விட குறுகிய காலத்தவணைக்கு அதிக வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு டிபாசிட்டுகள்வாங்குவார்கள். சொல்ப வட்டி போதுமெனத் திருப்தியடைந்திருக்கும் பெருத்த மூதலாளிகள் இந்த சமயத்தில் அதிக வட்டி கொடுப்பதாகச் சொல்லும் பாங்கர்களிடம் தங்களுடைய முதல்களை பாங்கியில் அப்போது ஏற்பட்டபிரகாரம் குறுகிய காலத்தவணைகளுக்குக் கொடுத்துச்சொல்ப அதிக வட்டியை அடைவார்கள். பாங்கர்களும் பணம் கிராக்கியாகவிருக்கும் சமயத்தில் தாங்கள் கொடுக்கும் கடன்களுக்கு வட்டியை அதிகப்படுத்தி அப்போது அதிக லாபத்தைச் சம்பாதிப்பார்கள். இந்த மாதிரி டிபாசிட்டுகள் சில குறிப்பிட்டகிராக்கி காலங்களில் குறுகிய காலத்தவணைக்கு பாங்கர்கள் வாங்குவதினால் இவைகளுக்குச் சீசன் (Season) டிபாசிட்டுகள் என்று பெயர்.

கடன்கள் (Loans):— எப்படிப் பலவகையான டிபாசிட்டுகள் மேற்கூறியபடி இருக்கின்றனவோ அதுபோலவே பாங்கர்கள் கொடுக்கும் கடன்கள் பலவகைப்படும். சாதாரணமாகக் கடன்கள் மூன்று மாதத்தில் திருப்பிக் கொடுக்கும்படியானவைகளாகவே இருக்கும். பாங்கர்கள் ஸ்தாவர சொத்துக்களின் பேரில் கடன் கொடுக்கமாட்டார்கள், ஏனென்றால் ஸ்தாவர சொத்துக்களின் பேரில் கொடுக்கும்படியான கடன்கள் நீண்டகாலக் கடன்களாகவே இருக்கும். அதிக ஜனங்களுக்கு உபயோகமாகும்பொருட்டுக் குறுகிய காலத்தவணைக்குத் தான் பாங்கர்கள் கடன் கொடுப்பார்கள். கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டின் ஜாமீன் பேரிலும், நகைகளின் ஈட்டின் பேரிலும் வியாபாரிகளுக்கு அவர்கள் எந்தெந்த சரக்குகள் வியாபாரம் செய்கிறார்களோ அந்தச் சரக்குகளின் ஈட்டின் பேரிலும், இரண்டு தகுந்த பேர்வழிகளின் உத்திரவாதத்தின் பேரிலும் சாதாரணமாய்ப் பாங்கர்கள் கடன் கொடுப்பார்கள். ஒரே பேர்வழியின் ஜவாப்தாரியின்பேரில் ஜங்கம சொத்து ஈடில்லாமலாவது மற்றொரு நபர் ஜாமீனில்லாமலாவது பாங்கர்கள் கடன் கொடுக்கமாட்டார்கள். இவ்வகைப்பட்ட கடன்கள் அநேகமாய் எல்லோருக்கும் தெரிந்தனவாகவிருக்கும். இவைகள் தவிர வியாபாரிகளுக்கு மிகவும் சௌகரியமாகவும், வியாபார அபிவிருத்திக்கு அனுகுணமாகவும் இருக்கும்படிக்குப்பாங்கர்கள் பணம் கொடுத்துப் பலவிதமாக ஒத்தாசை செய்கிறார்கள். அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்லுவோம்.

உண்டிகள் வாங்குதல் (Discounting bills of exchange):— நமது நாட்டு வியாபாரிகள் ஒருவருக்கொருவர் கொடுக்கவேண்டிய பணங்களுக்கு உண்டிகள் எழுதிக்கொடுக்கிற வழக்கம் அநேகருக்குத் தெரிந்திருக்கும். ஆங்கில பதமாகிய (Bill) என்பதுதான் நம்மவர்களுள் உண்டி எனக் கூறப்படும். நவீன நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க நமது நாட்டின் வியாபார முறை முழுவதும் முற்றிலும் மாறி ஆங்கிலதேசக் கோட்பாடுகள் நமது தேசத்திலும் அநுசரிக்கப்படுகின்றதென்பது யாவரும் அறிந்தனர். அது எல்லா விஷயங்களிலும் அவ்வளவு உசிதமில்லையாயினும் வியாபார அபிவிருத்தியை உத்தேசித்து ஆங்கிலர்கள் செய்து கொண்டிருக்கும்

முறைகளை நம்மவர்களும் அனுசரிப்பதானது நமது நாட்டின் க்ஷேமத்திற்கேயாகும். இந்த உண்டிகளை 'பில்' என்ற ஆங்கில பதத்தாலேயே கூறுவோம். பில் என்பதானது ஒருவர் மற்றொருவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக்கேட்டவுடனாவது, அல்லது இவ்வளவு நாள் கழித்தாவது இன்னாருக்காவது, அல்லது இன்னார் உத்தரவு பெற்றவருக்காவது, அல்லது இன்னாருக்காவது அல்லது அந்தபில்லைக்கொண்டு வருபவருக்காவது கொடுக்கும்படி எழுதிக்கொடுக்கும் பத்திரமேயாம்.

உண்டிகளினால் வியாபாரம் அபிவிருத்தியாகிறதென்றோம். அது எப்படியென்றால், வியாபாரிகள் தாங்கள் விற்கும் சரக்குகளின் கிரயத்திற்கு யாரிடம் சரக்கு விற்கிறார்களோ அவர்கள் பேரில் உண்டிகள் எழுதி தங்கள் பாங்கரிடம் கொடுத்து விடுவார்கள். இந்த உண்டிகளின் தொகைகளைப்பாங்கர்கள் கெடுத்தேதிகளில் வசூலித்து, அப்படி வசூலித்த தொகைகளை உண்டிகள் கொடுத்திருக்கும் வியாபாரிகளின் கணக்குகளில் வரவு வைத்துக் கொண்டு அந்த விஷயத்தை உடனே அந்தந்த வியாபாரிகளிடம் அப்போதைக்கப்போது தெரிவித்து விடுவார்கள். சரக்கு வாங்கும் சில்லரை வியாபாரிகளுக்குத் தாங்கள் வாங்கும்சரக்குகளின் கிரயம் முழுவதும் உடனே கொடுத்துவிட முடியாது. மொத்தமாகச் சரக்கு விற்கும் பெருத்த வியாபாரிகள் தங்களுடன் சரக்கு வாங்கும் சில்லரை வியாபாரிகளிடம் தங்களுடைய சரக்குகளின் கிரயத்தை இன்ன கெடுவிற்குள் கொடுத்து விட வேண்டுமென்று ஓர் ஏற்பாடு செய்துகொள்வார்கள். சில்லரை வியாபாரிகளுக்குச் சரக்கு விற்றவுடன் அந்தச் சரக்கின்கிரயத்திற்குத் தான் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி எவ்வளவுநாள் கழித்து அந்தத் தொகை தனக்கு வரவேண்டுமோ அந்தத்தவணை போட்டு அந்தச் சில்லரை வியாபாரியின் பேரில் ஓர் உண்டி எழுதி தன்னுடைய பாங்கரிடம் கொடுத்து, அந்தத் தொகையை மொத்தமாகச் சரக்கு விற்கும் வியாபாரி முன்னமேயே வாங்கிவிடுவார். பாங்கர்கள் சிலநாள் கழித்து வசூலாக வேண்டிய தொகையை முன்னடியே வியாபாரிகளிடம் கொடுத்துவிட வேண்டியிருப்பதால் இவ்வளவு நாள் கழித்துத் ... ... ... ... தனக்கு அந்த உண்டியின் தொகை கிடைக்குமோ அவ்வளவு நாட்களுக்குண்டான வட்டியைப் பிடித்துக்கொண்டுதான் இந்த மொத்த வியாபாரியிடம் உண்டித் தொகையைக் கொடுப்பார்கள். இந்த உண்டியின் தொகையானது கெடுத்தேதியில் வசூலாகாதபோனால் உண்டிஎழுதிக்கொடுத்த மொத்த வியாபாரிதான் அந்தப் பணத்திற்கு ஜவாப்தாரியாவார். பாங்கரும் உண்டியை மேற்கூறியவாறு வாங்குவதற்குமுன் உண்டி எழுதிக் கொடுப்பவரும் உண்டிப்பணம் கொடுக்கவேண்டியவரும் தகுந்த நாணயமுள்ள பேர்வழிகளாவென்று பார்த்துக்கொண்டு தங்களுக்குத் திருப்திகரமாக விருந்தால்தான் உண்டியை வாங்கிக் கொள்ளுவார்கள். இதனால் சரக்குவிற்கும் வியாபாரிக்குப் பணத்தட்டன்னியில் தான் விற்ற சரக்குகளுக்குப்பாங்கரிடமிருந்துஉடனேபணம்வந்து விடுகிறது. அந்தப்பணத்தை வாங்கி மறுபடியும் மற்றொரு புரட்டலுக்கு உபயோகிக்கலாம். இம்மாதிரி பில்களுக்கு அவைகளின் தவணைத்தேதிக்குமுன் வட்டியைப்பிடித்துக்கொண்டு தொகைகளைக் கொடுப்பதற்கு ஆங்கிலத்தில் 'டிஸ்கவுண்டு' (Discount) என்று சொல்லப்படும். இம்மாதிரி பாங்கர்கள் செய்வதானது வியாபாரிகள் விற்ற சரக்குகளுக்கு அவைகளின் கிரயத்தையே பாங்கர்கள் வசூல் செய்து கொடுப்பதாகும். நவீன நாகரிகத்தில் இம்மாதிரி வியாபாரிகளுள் ஒருவருக்கொருவர் மேற்கூறியவாறு பில்கள் எழுதிக் கொண்டு பாங்கர்களிடம் டிஸ்கவுண்ட் செய்வதானதுவெகுசௌகரியமாகவிருக்கின்றது. நிலுவை வசூல் செய்வதற்காக வியாபாரிகள் அதிக சிரமப்பட வேண்டியதில்லை. (தொடரும்)



# ராணா பிரதாபசிம்மன்.

அல்லது

## "ரஜபுத்திர தேசபக்தி."

(ஸ்ரீமான் மகாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது)

(All Rights Reserved)

—————(0)—————

(144-வது பக்கம் தொடர்ச்சி)

பகைவர்களால் துயரடைந்து விடுதலைபெற விரும்புவோர் யாவரும், யுத்த தேவதையாகிய உன்னையே சரணடைகின்றனர். எங்கள் குலமுதல்வனாகிய பூபஸிம்மரும் உன்னுடைய அருளால், நீ மனமுவந்துகொடுத்த வீரபட்டாக்கத்தியின் பிரபாவத்தினாலன்றோ! தன்முன்னே நின்ற பகைவர்களையெல்லாம், கூட்டம் கூட்டமாகச் சிதைத்து, வெற்றிமேல் வெற்றிபெற்று, சித்தூரில் ஆட்சிசெய்ய ஆரம்பித்தனர். எங்கள் குலத்தைச்சித்தூரில் நாட்டியது நீயே யன்றோ!

எங்கள் மடமையாலும் வீரக்குறைவினாலும் நாங்கள் இழந்துவிட்ட நாட்டை, இப்பொழுது மீண்டும் அடைய முயர்ச்சிக்கும்பொழுது, தாயாகிய நீயன்றோ எங்களுக்குத் துணைநிற்கவேண்டும். "பொல்லாத சேயெனினும் தாய் தள்ளல் நீதமோ! புகலிடம் பிறிதுமுண்டோ" என்றபடி தாயாகிய நீயே எங்களை ஆதரவு செய்யாது நின்றுவிடில், இப்புவனத்தில் நாங்கள் அடையக் கூடியபேறுதான் என்ன? உன்னையல்லாமல்வேறே ஒருவரைப் பொருளென்று நான் நினைக்கவில்லை சரி, உன் முகம் மாறுபடுகின்றது, நான் உறுதியுடன் நிற்பவனென்று சந்தேகிக்கிறாய் போலும்! ஆ! தாயே! இதோ! சத்தியம் செய்கிறேன்! பலி பீடத்தில் தோய்ந்து கிடக்கும் ரத்தத்தை என் நெற்றியில் பூசிக்கொண்டு பிரமாணம் செய்கிறேன்!" வெற்றியேயாயினும் தோல்வியேயாயினும், உயிருடன் மீண்டாலும் மீளாமல் போனாலும், உற்றாரை இழப்பினும் ஊர்விட்டு ஓடினும், நல்வாழ்வு அடையினும் வனவாசம் சேரினும், உள்ளத்தில் சிறிதும் சலிப்பின்றி, மனமொழி, மெய்த்தளர்வின்றி தாயாகிய நின்பணியும் தாய்நாட்டு அவள்பணியும் இயற்றிநிற்பேன். என் உயிரும் உடலும் தாய் நாட்டின் பொருட்டு நின் வசம் இப்பொழுதே ஒப்படைத்தேன், என்னை இப்பொழுதே வீரபலியாக ஏற்றுக்கொள்ளத் திருவுளம் கொள்வையேல், எந்நாடு விடுதலையடையும் பொருட்டு அவ்விதம் செய்ய இப்பொழுதே தயாராக இருக்கிறேன், இதுவே என் துணிவு! சத்தியம்!

நலமகனாகிய என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை பிறந்து விட்டது. உன் முகத்தில் தோன்றும் மந்தகாசம் எனக்கு உயிரளித்துத் தேற்றுகின்றது. என் வேண்டுகோளை அங்கீகரித்து விட்டனை. அன்னே நின்கருணைப் பெருக்கு இருந்தவாறு என்னே!

"அன்றே என்றன் ஆவியுமுடலும்
உடமை யெல்லாம்
குன்றேயனையாய் எனையாட்
கொண்டபோதே கொண்டிலையோ

இன்றோரிடையூறெனக்குண்டோ! ஆ! உன்னிடமிருந்து விடைபெறுவதற்கு எனக்கு மனம்வரவில்லை. உன் அருள் பெற்றோர்க்கு அதனைவிடச் சிறந்ததோரின்பம் பிறிதொன்றுமுண்டோ? எனக்கு விடையளிப்பாய்! யான் சென்று என்நாட்டினரை ஒருங்கேகூவி பெரியதோர் சேனையைக் கூட்டுவேன்! காற்றினும் விரைந்து செல்லக்கூடிய குதிரைகளைச் சேர்ப்பேன். பட்டாளங்களை அணி வகுத்து நிறுத்துவேன். சத்திகளை நன்றாகத் தீட்டி வைப்பேன். உன் அருளை எதிர்பார்த்து நிற்பேன். எந்த நிமிஷத்தில் திருவருள் சுரக்கின்றனையோ அப்பொழுதே புறப்படுவேன் வீராவேசத்துடன். ஆ! இப்பொழுதே வெளியே சென்றுவிட என் மனம் வரவில்லை. உன்னிடத்தில் இப்பொழுது எனக்குண்டாகும் பக்திக்கு ஓர் எல்லையில்லை. இன்னுமொரு முறை வணங்குகிறேன். தேவியாகிய உனக்கு நமஸ்காரம்; மூலப்பிரகிருதியாகிய உனக்கு நமஸ்காரம்; கல்யாண குணசம்பன்னையாகிய உனக்கு நமஸ்காரம்; சச்சிதானந்த ரூபிணியாகிய உனக்கு நமஸ்காரம்; புவனேஸ்வரியாகிய உனக்கு நமஸ்காரம்; ஹே! ஜகன் மாதா! என் ஹிருதயத்தில் ஓர் கணமும் நீங்காது பிரகாசிக்கும் ஜோதியே! உனக்கு நமஸ்காரம்; உன்னுடைய திருவடி

யைச் சரணென அடைந்த ஏழை எனக்கு இன்னருள் சுரந்த அமுதவாரியே! உனக்கு நமஸ்காரம்.

பூரணி! புராதனி! சுமங்கலே! சுதந்தரி!
  புராந்தகி! த்ரியம்பகி! யெழிற்
புங்கவி விளங்கு சிவசங்கரி! சகஸ்ரதள
  புஷ்பமிசை வீற்றிருக்கு
நாரணி! மநுநீதநாயகி! குணநீத
  நாதாந்தசக்தி யென்றுன்
நாமமே யுச்சரித்திடு மடியர் நாமமே
  நானுச்சரிக்க வசமோ!
வாரணி! சடைக்கடவுளாரணி யெனப்புகழ்
  வகிலாண்டகோடி யீன்ற
வன்னையே! பின்னையுங் கன்னியெனமறைபேசு
  மானந்த ரூபமயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ்கங்கைபுகழ்
  வளமருவு தேவையரசே!
வாராஜனுக் கிருகண் மணியாயுதித்தமலை
  வளர் காதலிப் பெணுமை யே. என்று

துதித்துத்தேவியின் பாதங்களில் மும்முறைசாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டு, எழுந்து, தாயினை விட்டுப்பிரியும் சேயேபோல,உளம் இளகி பிரிக்க முடியாத அன்புடன் ஒருவாறு அம்பிகையின் திருமுகத்தை மருபடியும் மருபடியும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே கோயிலை விட்டு நீங்கினன்.

## மூன்றுவது அத்தியாயம்.

கதிரவனும் கீழ்திசையில் உதயமானன். சூரியபுத்திரரின் நாடு சிறப்படையும் காலம் நெருங்கி விட்டதென்பதை சூசிப்பித்துக் காட்டுவது போல, பாலசூரியனின் இளங்கிரணங்கள் சிவந்த நிறத்துடன், அந்தகாரத்தை அகல ஓட்டினன்.புற்களின் மீது பாவியிருந்த பனிநீர்த் துளிகள், அக்கிரணங்களின் ஒளியால் பலவித வர்ணங்களுடன் பிரகாசித்து;பூமாதணிந்த மரகதச் சேலையில் அழகுடன் அமைக்கப்பட்ட பல்வேறுபட்ட மாணிக்கங்களோ! என்று கூறும்படி யிருந்தன. வெய்யோனை வரவு பார்த்தீத வெறிவாமலென்று வாய்விட்டு அழைப்பனபோல் பக்ஷி ஜாலங்கள் கூவின. இரவு முழுவதும்வெளிக்கிளம்பாது தந்தம் குகைகளில்அடங்கிக் கிடந்த மிருகங்கள், பகலவன் வரவையறிந்து ஆனந்தமாக ஆரண்யத்தில் உலவும்பொருட்டு வெளியே புறப்பட்டன. விதிவசத்தால் மதியிழந்து நாட்டிழந்த ராஜபுத்திரர்கள்,பிரதாபனின் சேர்க்கையாலும், அம்மை பவானியின் அருளாலும் உளங்களித்து, போர்முகத்தை விரும்பி வெளிப்புறப்படுவதேபோல் அக்காட்சியிருந்தது.

சோலைகளிலும் நந்தவனங்களிலு முள்ள மலர்ச் செடிகள் நன்கு புஷ்பித்து,புவனகர்த்தாவாகிய சித்திரகாரனல் மிக்க வேலைப்பாட்டுடன் அழகிய வர்ணங்கள் தீட்டப்பெற்று காண்போரின் கண்களைக் கவர்ந்து நின்றன. அப்புஷ்ப ஜாதிகளினின்றும் வண்டுகளால், ஆகாயமுழுவதும் பரப்பப்பட்ட மாகந்தப்பொடியினுல், காற்றானது கம்மென்று வாசனை ஏற்றப்பெற்றது, நறுமணம் கமழ்ந்து வீசியது.

உதயசாகரம் அக்கோத்தில் ஓர் இணையற்ற பொலிவுடன் விளங்கியது. நீர்ப்பரப்பின்மீது செங்கிரணங்கள் பிரதிபலித்துப்பொன்மயமாகக் காணப்பட்டது. அப்பொழுது மலர்ந்த செந்தாமரை மலர்கள், நீர்சேலையுடுத்த பார்மடந்தையின் அழகியகைகளோ!முகங்களோ! என்று கூறும்படி யிருந்ததும் தமது இன்னுயிர் நாயகனுகிய சந்திரன் மறைந்து, வெய்யோனுகிய பகைவன் வந்து விட்டதை அறிந்து, பதிவிரதா ஸ்திரீகள் அன்னியரைக்கண்ட காலத்துப் பயந்து, தந்தம் இல்லங்களின் கதவுகளை மூடுவதேபோல, குவளைமலர்கள், இதழ் மூடிக்கொண்டன,

பூமகளினும் அழகுடன் விளங்கும், வாம மேகலையணிந்த வனிதையர்கள், உதயபுரத்தின் அழகிய வீதிகளிலிருந்து தந்தம் துடிபோன்ற சிற்றிடையில்தாங்கிய பொற்குடங்களுடன், புறப்பட்டு ஏரியைநோக்கி வந்து கொண்டிருந்தனர். அரண்மனையில் முழங்கப்பட்ட பேரிகைகளின் சத்தம் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன. பவானி தேவியின் காலை பூஜை நேரத்தில் கோயிலிலடிக்கப்பட்ட மணியினோசையானது கோபுரத்தின் வழியாக நகர் முழுதும் கேட்டது.

உதயபுரத்தின் அரண்மனையின் ஓர் தனியானஇடத்தில் பிரதாபன் ஓர் சாய்பீடத்தில் சாய்ந்துக் கொண்டிருந்தனன். அது அவனுடைய சொந்த அறை. அவனைத் தவிர வேறு யாரும் அங்குவிசேஷமாகச் செல்வதில்லை. அந்த அறையானது அரண்மனையிலுள்ள மற்ற இடங்களைப்போலவே மிக அழகியதாக யிருந்தது. தரையில் அழகியதோர் ரத்னக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தன. இரண்டு நாற்காலிகள் நல்ல மழுமழுப்புள்ள கருங்காலி மரத்தினுல் செய்யப்பட்டு, சிவப்பு நிறமுள்ள, வெல்வெட்டு மெத்தைகள் தைக்கப்பெற்று, அறையின் ஒரு பக்கத்தில் போடப்பட்டிருந்தன, (தொடரும்)




## காயாரோகண வைத்தியசாலை, கும்பகோணம்.

(டாக்டர் V. P. சாமி அவர்களால் மிக்க திறமையுடன் நடத்தப் பெறுவது)

சித்தர்களுடைய உயர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி பல நூற்றண்டுகளாகக் கையாளப்படும் சிறந்த சுதேச வைத்தியசாலை. ஆராய்ச்சியும் அனுபவமும் கீர்த்தியும் வாய்ந்த ஆரியதோர் வைத்திய குடும்பத்தினரால் சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்குத் தருமவைத்தியம் செய்யப்படும். மாதந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் பிணி நீங்கி, வாயார வாழ்த்திச்செல்கின்றனர். மலபந்தம் அஜீரணம், ஜுரம், காசம் முதலிய நோய்களுக்கும்; குஷ்டம், குன்மம் முதலிய மகாரோகங்களுக்கும் ஆச்சரியப்படும்படி மிக்க சுலபமாகச் சிகித்சை செய்து நிவர்த்திக்கப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி, காமாலை முதலிய கொடிய வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நமது வைத்தியசாலை அழியாப்புகழ் பெற்றிருக்கின்றது. ஏழைகளுடையவும், பிணியாளிகளுடையவும் நன்மையையே கருதி நடத்தப்படும் உயர்ந்த சுதேச வைத்திய ஸ்தாபனம் இதுவே. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், காயாரோகண வைத்தியசாலை,
காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம்.



கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
பிரதம ஸமஸ்கிருத பண்டிதர்
ஆர். சிவராம சாஸ்திரிகளால்
பிரசுரிக்கப்பட்ட

## ஸமஸ்கிருதபுஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமசரிதம் (ஸமஸ்கிருத வசனம்) | 0 | 7 | 0 |
| சாகுந்தலா சரிதம் டிடை | 0 | 4 | 0 |
| சாருதத்த சரிதம் டிடை கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ா-ஸ்ரீ சுவாமிநாதய்யர் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது | 0 | 7 | 0 |
| சுசித்ர ரத்னவளி | 0 | 10 | 0 |
| தர்மகல்பவல்லி (முதல் பாகம்) | 1 | 8 | 0 |
| சுக்ல யஜுர்வேதம் | 4 | 0 | 0 |
| ஸ்ரீமத் பாகவதத் தமிழ் வசனம் | 12 | 0 | 0 |
| தர்மகல்பவல்லி (2-வது பாகம்) டிம்மி 2 பாரம் கொண்டஸஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவரும். வருஷ சந்தா | 2 | 0 | 0 |

பண்டிட் ஆர். சிவராம சாஸ்திரி,
தலைமை ஸமஸ்கிருத பண்டிதர்,
டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.



## சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும் வெளிவரும்
ஓர் தமிழ்ப்பத்திரிகை.

சென்ற 7 வருஷகாலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம். கைத்தொழில் வியாபாரம் முதலிய செல்வவிருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்து கொண்டிருந்த "வர்த்தக மித்திரன்" தற்காலப் போக்கை அனுசரித்து "சுதந்திரன்" என்னும் பெயருடன் 4 வருஷ காலமாக இராஜீய விஷயங்கள், மகாத்மா காந்தியவர்களின் உபதேசம், இந்தியா முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளி வருகின்றது. சுயராஜ்யமடைய விரும்புவோர் யாவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்யமடைந்து சுகஜீவிகளாகவேண்டும்.

வருஷசந்தா இந்தியாவிற்கு ரூ 6—0—0.

சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

நம் சகோதரர்களே! வியாபாரிகளே!!
விளம்பரம்செய்வோர்களே!!!

# திராவிடன்

நம் தமிழ் நாட்டார்
முன்னேற்றத்திற்காகவே
வெளிவந்துலாவும்
தினசரிப் பத்திரிகை.

அரசர்முதல் சாமானிய விவசாயிவரை, செல்வவான் முதல் ஏழைவரை, சாதி, வகுப்பு பேதமின்றி யாவரும் வாசித்து வருவது நம் பத்திரிகையையே.

தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டார் குடியேறியிருக்கும் வெளிநாடுகள்தோறும் பரவி வருகிறது.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிப் பணம் சம்பாதிக்க ஏற்ற பத்திரிகை இதுவே.

மானேஜர்:—
திராவிடன்'
போஸ்டு பாக்ஸ் நெ 760,
எழும்பூர், மதருஸ்.

---

# "தெய்வ பக்தன்."

மாதம் இருமுறை வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.

தமிழ் நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்ம ஸ்தாபனங்கள் இவற்றில் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளையும் அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களையும், பிற அறிவு வளர்ச்சிக்கும், செல்வ விருத்திக்கும் உற்ற செய்திகளைப்பற்றி பல அறிவாளிகள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வொரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறாதிருக்கவேண்டிய ஒரு சிறந்த பத்திரிகையாகும்.

வருஷ சந்தா ரூ 3.
மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

---

# "சந்திரா" பற்பொடி.

இந்த 'சந்திரா' பற்பொடியின் குணம் பல்வலி, பல் அசைதல், ஈர் கரைதல், பல்கூசுதல் முதலிய சகலதந்தரோகங்களையும் நிவர்த்திசெய்து பல்லைக் கெட்டிப்படுத்துவதில் நிகரற்றது. அநேக டாக்டர்களாலும் கனதனவான்களாலும் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் குணம் ஒரு முறை வாங்கி அனுபவித்தால் தெரியும். ஒரு பலம் டப்பி 1க்கு விலை அணா 3. டஜன் 1க்கு விலை ரூ 2 வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும், மிகுந்த உயர்ந்த முறையில் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது.

எல். ராமச்சந்திர ஐயர்,
நீலகண்ட கதர் ஸ்டோர்,
பெரியகடைத்தெரு கும்பகோணம்.

---

# ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர் குத்தல், நீர் எரிச்சல், வெட்டை, புண், வயறுகடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அநுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகப் படுத்தக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4.

## அஷ்டகர்ம
## ஸர்வரோக நிவாரண பௌஷ்டிக லேகியம்

க்ஷயம் முதலான சகல ரோகங்களையும் கண்டித்து சரீரத்தை பெலப்படுத்தி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடியது. பத்தியமில்லை. இதன் விலை சேர் 1-க்கு ரூ. 4.

## நேத்ரானந்த தைலம்.

கண் எரிச்சல், கண்புகைச்சல், கண்மறைவு மண்டைக்குத்தல், சொரிசிரங்கு இவைகள் சௌக்கியமாகும். சீசா சேர் 1-க்கு ரூ. 2.

குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகா வியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்டு.





# தத்துவ போதினி.

ஓர் சிறந்த மாதப்பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணமும், அப்பரிய நாவல்களும், திருக்குறளுரையும், சிவபுரி க்ஷேத்திரத்தின் மகிமையும், தத்துவ விஷயங்களும் ஸ்திரீகள் சிறுவர்களைக் குறித்த புத்திமதிகள், கல்லூரைகள், வர்ணாச்ரம தர்மத்தைக்குறித்த முக்கியமான விஷயங்களும் தக்க பெரியோர்களால் எழுதப்படுகின்றது.

இந்தியா, பர்மா, சிலோனுக்குச் சந்தா ரூ. 1—0—0.
(வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0).

தத்துவபோதினி ஆபீஸ்,
328, தங்கசாலைத்தெரு, சென்னை.

---

# தேசீய ராஜீய
# சரித்திர நூல்கள்.

ஸ்ரீமான் எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதியவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராஜபுத்திர வீரர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| 2. | ஆரிய சரித்திரம் | 1 | 0 | 0 |
| 3. | மகாத்மா காந்தி சரிதம் | 0 | 8 | 0 |
| 4. | ஒத்துழையாமை சரித்திரம் | 0 | 4 | 0 |
| 5. | இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 | 0 |
| 6. | ஐசுவரிய சக்கரம் | 0 | 8 | 0 |
| 7. | திருக்குறள் நீதிக்கதைகள் | 0 | 6 | 0 |

இவையும் இன்னும் பல அரிய புத்தகங்களும் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

மயில் வாகன் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஐயப்பசெட்டித்தெரு, மண்ணடி, மதருஸ்.

---

# கற்பகம்.

ஒரு செந்தமிழ் மாதச் சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

வருஷ சந்தா உள் நாட்டிற்கு ரூ 1—0—0.
,, வெளி நாட்டிற்கு ,, 1—8—0.

மானேஜர்:— "கற்பகம்" புதுவை.

---

# லோகமான்ய திலகர்.

பிறந்தது முதல் இறந்தது வரை முழு விவரத்துடன் ஸ்ரீயுத கிருஷ்ணசுவாமி சர்மா எழுதியது. கீதாரகசியம், காந்தி-திலகர் சம்வாதம், திலகர் ராஜீயக் கொள்கை, விசாரணைகள், நித்திய வாழ்க்கை முதலிய பலவிஷயங்கள் 16 அத்தியாயங்களில் காணலாம்.

300 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—8—0.

## தேசாபிமானத்தையூட்டும் நூல்கள்,

ஸ்ரீயுத கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றியவை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மகாத்மா காந்தியடிகள் | | | | | 1 | 8 | 0 |
| அலி சகோதரர்கள் | | | | | 1 | 0 | 0 |
| டால்ஸ்டாய் ருஷ்யஞானி | | | | | 0 | 4 | 0 |
| சிவாஜி மகாராஜா | | | | | 1 | 0 | 0 |
| இந்தியா இழந்த தனம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜீக சாஸ்திரம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜராஜ சோழன் | | | | | 0 | 10 | 0 |
| அசோக சக்கரவர்த்தி | | | | | 0 | 8 | 0 |
| நெபோலியன் | 1 | 8 | 0 | பண்டித நேரு | 0 | 2 | 0 |
| கும்பமகாராணா | 0 | 6 | 0 | ஆத்மசக்தி | 0 | 10 | 0 |

மானேஜர், கிராமானுகூலன், கும்பகோணம்.

---

தாதுபுஷ்டிக்குச் சிறந்த
ராஜவீரிய யுனானி
# மகாவித்துவாதி லேகியம்.

30 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டப்பி ரூ. 3.

பிரதிதினம் காலை மாலை சாப்பிட்டால் நல்ல பசியைக்கொடுத்து, மலத்தை சுகமாய்க்கழித்து, இரத்தவிர்த்திசெய்து, நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ராஜக்கருவிகள்பலப்பட்டு தேகதிடம், தேஜஸ், முகவசீகரம் மனோற்சாகம் முதலியவை ஏற்பட்டு சந்தானவிர்த்தியை யளிக்கும். சுருங்கச்சொல்லின் இழந்துபோன பலம் முழுவதும் திருப்பிக்கொடுக்கும். வேண்டுபவர் கேட்லாக்கிற்கு எழுதவும்.

ஐ. ஷேக்ஹாலி சாகிப்,
நேடிவ் யுனானி டாக்டர்,
ஆயுர்வேதிக் யுனானி மெடிகல் ஹால்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# A. N. காதர் அவுலியா பரிமளச்சாலை,

வலங்கைமான். (தஞ்சை ஜில்லா.)

——:(x):——

A. N. காதர் அவுலியா

## வீரிய விருத்தி சிட்டுக்குருவி லேகியம்,

24 நாள் சாப்பிடக்கூடிய 8 பலம் (1-சேர்) எடையுள்ள டப்பி 1க்கு விலை ரூ. **2—12—0.**

அறிவிற் சிறந்த ஆரிய சிரோன்மணிகளாகிய எனது சகோதரர்களே! அவசியம் கவனிக்க வேண்டியது ஒன்று.

கனவான்களே! ஜீவனுக்கு இரத்தமே பிரதானம். முக்கியமாக மனிதர்கள் நோயின்றி வாழ்வதற்கு, ஆயுள் விருத்தி, பெலம், காந்தி, ஊக்கம், காமம், வீரிய விருத்தி, ஆண்மை, சந்தான விருத்தி முதலியவை அடைவதற்கு அவ்விரத்தத்தினின்று உண்டாகும் சுக்கிலமே பிரதானம் ஆகையால் இச்சுக்கிலத்தைப்பற்றிய வியாதிகளை அறிந்திருப்பது பிரதானத்திலும் மிகப் பிரதானமே. ஏனெனில் இப்பிராணதாரமாகிய இந்திரியத்தை உற்பத்தி செய்யக்கூடியதில் முக்கியமானவை வீரியவிர்த்தி சிட்டுக்குருவி லேகியம் ஒன்றே. இதையுண்டு உற்பத்தி செய்துகொள்ளாமல் ஆண்மையை முழுவதும் இழந்தவர்களனந்தம். ஆண்மைகுறைவு பட்டிருப்பவர்களனந்தம். நாளுக்கு நாள் அதிக அளவாய் வீரியதத்துவம் நஷ்டமடைந்து வருபவர்களனந்தம். இன்னும் பலநோய்களடைந்து தளர்ந்து மெலிந்து துற்பலமடைந்து மனமுடைந்து சொல்லொணு வருத்தத்தோடு அகால மரணத்திற் குள்ளாகிறார்கள். இவ்வருமையான வீரியவிருத்தி சிட்டுக்குருவிலேகியத்தை யாதொரு பத்தியமன்னியில் உண்பவர், மேற்கண்ட வியாதிகளை ஆண்டவன் உதவியால் நிவர்த்தி செய்து, முன்னிருந்த பெலத்தைவிட பதின்மடங்கு பெலத்தையும், குறையாத ஆண்மை தத்துவ வீரியத்துடன் சுருசுருப்பையும், மனைவாழ்க்கையில் ஆயுள்பரியந்தம் அளவு கடந்த மாறாத இன்ப சுகத்தையும் உண்டுசெய்துக் கொண்டே வரும். தஞ்சைமாநகரை ஆண்டு வந்த சிவாஜீ மகாராஜா அவர்கள் கையாண்டுவந்த அரண்மனை வாகட முறைப்படி செய்து விற்றுவருகிறேமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவருக்கும் தெரிந்த விஷயம். இவ்வீரிய சிட்டுக்குருவி லேகியத்தில் ஆண் சிட்டுக்குருவியுடன் விலையுயர்ந்த அபூர்வ யுனானிசரக்கு 13, வித்து 33, பிசின்வகை 9, கடைச்சரக்கு 34, பால்வகை 7, பழ ரசவகை 7, மூலிகைச் சத்துவகை 9 புஷ்பவகை 10, அயகாந்தசெந்தூரம் 2, வெள்ளிரேக் 1 கற்கண்டு, தேன், நெய் 8, ஆக சரக்கு 128 உடன், செய்பாகம் கைபாகம் தவறாமல் வாய்க்கு மதுரமாகச் செய்திருக்கிறபடியால் இதன் சிறந்த குணங்களைக்கீழே காணலாம்.

### தீரும் வியாதிகளின் விபரம்.

உஷ்ணம் [illegible] கடுப்பு, வெட்டை வாய்வு, [illegible] பிடிப்பு, [illegible] அசதி, சுஸ்தி, சோம்பல், [illegible] குறைவு, இடுப்புவலி தாதுநஷ்டம், இந்திரியம் நீற்றுப்போய் இருக்குதல், மனை வாழ்க்கையில் விருப்பமின்றி இருத்தல், மனைவியாருடன் சரச சல்லாப வார்த்தையாடுகையில நாதம் தனக்குத் தெரியாமல் ஸ்கலிதமாகுதல் மனைவாழ்க்கையில் சொற்பநேரத்தில் ஸ்கலிதமாகுதல், நோக்குமளவில் ஸ்கலிதமாகுதல், நித்திரையில் ஸ்கலிதமாகுதல், மனை வாழ்க்கைக் காலத்தில் ஆண்குறி பருத்து சொற்ப நேரத்துக்கெல்லாம் குறி தளர்ந்து இந்திரியம் வெளிப்படுதல், மனைவாழ்க்கையில் எண்ணமே இல்லை மலும், உந்தியில் காங்கை மீறி சம்போகக் குறைவு ஏற்பட்டு ஆண்குறி தளர்ந்து வலுவில்லாமற் சோர்வடைந்திருக்குதல், இந்திரிய இழிவு, ஆண்மலடு, மந்தம், கிழத்தனம், சோகைத்தனம், சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், ஆண்குறி மெலிவு, துவளல், ஆண்குறி சோர்வடைந்திருக்குதல், மனைவாழ்க்கையில் இருவரும் இன்பசுகமில்லாமல் சீக்கிரம் ஸ்கலிதமாகுதல், சொற்ப வாலிபகாலத்தில் முற்றிலும் மனைவாழ்க்கை எண்ணமே இல்லாமல் மலட்டுத்தன முடையவர்களும், வாலிப மூர்க்க காலத்தில் மிதமிஞ்சி பல விலைமாதர்களிடத்தில் செலவுசெய்து தனது காயசி மனைவாழ்க்கையில் பெலனற்று இருக்குதல், அகால மூப்பினால் சம்போககுறைவு ஏற்பட்டவர்களும், மிதமிஞ்சிய சம்போகத்தால் நீர்த்தாரை பெருத்து மனைவாழ்க்கையில் இன்பமற்றிருக்குதல், கவலை, ஊக்கம், அதிகப் பிரயாசை, நித்திரை பங்கம், இவைகளால் இரத்தம் கெட்டு உடல் வெளுத்துப் பெலஹீனமுடையவர்களும் அன்னத்வேஷம், பசிமந்தம், ஜீரணக்குறைவு, புளித்த ஏப்பம், வயர் உப்பிசம் இவை யாவையும் நீக்கி, இரத்த விருத்தியுடன் நரம்புகளில் முறுக்கேறி வீரிய விர்த்தியை உண்டு செய்து கொண்டே இந்திரியத்தை பனை நொங்கைப்போல் இருக்கினதை இளக்கியும், குறுகினதை நீளவும்செய்து பருத்து நீண்டு ஆண்மை தத்துவத்தையும், ஆயுள் பரியந்தம் மாறாத பூரண சக்தியையும், மனை வாழ்க்கையில் மனைவியின் ஆசையைப் பரிபூரணமாய் நிறைவேறும்படி செய்து கொண்டு வருவதுடன், நோயின்றி தேக புஷ்டி, முகவசீகரம், ஆரோக்கியம் முதலானவைகளை உண்டு செய்துக்கொண்டு வருவதுடன் ஆண்டவன் உதவியால் சந்தான புத்திர பாக்கியத்தை எளிதில் பெறவும் செய்யும். இந்த லேகியத்தை உபயோகப்படுத்திய உத்தமர்கள் இந்தச் சிறந்த குணங்களைச் சுகானந்த ஆனந்தத்துடன் புகழ்வார்களென்பது உண்மையான நிச்சயம். லேகியத்தை ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

லேகியத்தைக் காலையில் ஒரு சுண்டைக்காய் அளவும் மாலையில் இரண்டு சுண்டைக்காய் அளவும் சாப்பிடவேண்டும். (பத்தியம் யாதொன்றுமில்லை.)



# சிந்தாமணி திராவிய சாலை,

பேட்டைத்தெரு, கும்பகோணம்.

## ஸிரேஷ்டமான

### சிந்தாமணி ஔஷதங்களின் விலை விபரம்.

| எண் | ஔஷதம் | விலை |
|---|---|---|
| 1 | சிந்தாமணி ஜுர நிவாரணி (எல்லாவகை ஜுரங்களுக்கும்) பாட்டில் 1-க்கு ரூ. | 0—12—0 |
| 2 | ஷை சந்திர கலாப செந்தூரம் (வயற்றுப் போக்குகள் சீதபேதிக்கு) | 1—0—0 |
| 3 | ஷை வாயுவேதனுபேதினி (தீராத இடுப்புவலிகள் வாயுவலிகளுக்கு) சீசா 1-க்கு | 0—6—0 |
| 4 | ஷை ஜீவாமிர்த மாத்திரை (எல்லாவியாதிகள்பலம் தாதுவிர்த்திக்கு) மா 24-க்கு | 1—0—0 |
| 5 | ஷை காலரா சஞ்சீவி (விஷபேதியை ஒரே வேளையில் நீக்கி காப்பாற்றுவது) | 0—12—0 |
| 6 | ஷை ரஸம் (எல்லாவலிகள் சுளுக்கு மூர்ச்சை முதலியவற்றை உடனே கண்டிப்பது) | 2—0—0 |
| 7 | ஷை வாத கெஜபாத கேஸரி 3முறைக்கு | 3—0—0 |
| 8 | ஷை போஜன கேசரி (அக்கினி மந்தம் பித்தம் வாய்வு வகையருவுக்கு) | 0—12—0 |
| 9 | ஷை சுவர்ணமாலிகா மாத்திரை 40-க்கு | 3—0—0 |
| 10 | ஷை சுவர்ண செந்தூரம் 14 வேளை | 7—0—0 |
| 11 | ஷை சித்தமகரத்வஜம் 14 வேளை | 3—0—0 |
| 12 | ஷை கோரோஜனை மாத்திரை 90-க்கு | 0—12—0 |
| 13 | ஷை குழந்தை வயற்றுக்கட்டி நிவாரணி | 1—8—0 |
| 14 | ஷை சூதகவேதனு பேதினி | 2—0—0 |
| 15 | ஷை பெரும்பாடு ரோக நிவாரணி | 2—0—0 |
| 16 | ஷை சஞ்சீவி மாத்திரை (சுகபேதிக்கும் ஜுரங்கள் பல வியாதிகளுக்கும், மா 75. | 0—12—0 |
| 17 | ஷை சோகைபாண்டு நிவாரணி | 2—8—0 |
| 18 | ஷை க்ஷயகாச நிவாரணி 20 வேளை | 5—0—0 |
| 19 | ஷை குன்ம ஹரகுடாரி தவாத குணம் | 3—8—0 |
| 20 | ஷை குடல்வாத நிவாரணி | 5—0—0 |
| 21 | ஷை அப்ரக செந்தூரம் (நீரழிவு வெட்டை மதுமேகம் தாது கட்டுக்கும், | 5—0—0 |
| 22 | ஷை வீதாம்ல செந்தூரம் நீரடைப்பு நீர் எறிவு வகைகளுக்கு 16 வேளைக்கு | 1—0—0 |
| 23 | ஷை வெள்ளைவெட்டை நிவாரணி | 2—4—0 |
| 24 | ஷை மூலரோக நிவாரணி | 3—0—0 |
| 25 | ஷை யானைக்கால் நிவாரணி 14 வேளை | 3—8—0 |
| 26 | ஷை மேகரோகாந்தகன் | 3—0—0 |
| 27 | ஷை மேகரண நிவாரணதைலம் | 0—8—0 |
| 28 | ஷை நேத்திராஞ்சனம் பாட்டில் 1-க்கு | 0—8—0 |
| 29 | ஷை வில்வாதி லேகியம் 1சேர் டப்பி | 2—8—0 |
| 30 | ஷை பலாலாக்ஷாதிதைலம் 1சேர்டப்பி | 2—0—0 |
| 31 | ஷை இருமலுக்கு பவளபஸ்பம் | 2—8—0 |
| 32 | ஷை விஜயபைரவ தைலம் (வீக்கங்கள் வாய்வுகள் வல்கள்ஜன்னிபாரிசவாதம், | 1—0—0 |
| 33 | ஷை காருண்யாமிருதம் வலிப்புகள் சித்தப்பிரமை மூர்ச்சைகளுக்கு | 3—0—0 |
| 34 | ஷை ஸ்ரீ சற்குருநகை 1-க்கு | 2—8—0 |
| 35 | ஷை சந்தான கல்ப்பம் | |

அரை அணு லேபிள் அனுப்பினல் முழுவிபரமடங்கிய காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

புரோப்ரைட்டர்

ஆ. சி. கிருஷ்ணசாமி செட்டியார்

மணத்தின் ஊற்று! வாசனையின் வித்து!!

# பரிமளப்பொக்கிஷம்

# எது?

கும்பகோணம்

பெரியகடைவீதி.

## K; அப்துல்ரஹிமான் சாஹிப் & சன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம்வாய்ந்த எங்களால் தயாரிச்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே! எமது பரம்பரை வியாபாரப்பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள், ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒருமுறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவ்லியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்தி பெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர்சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப்பொருளை வழங்கினர்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்துவருகிறோம் என்பதையும் தற்சமயம் தென்னாட்டிலுள்ள அரசர் குடும்பத்திலும், பிரபுக்களகத்திலும் நடக்கும் திருமணம்போன்ற மற்றுமுள்ள சுபகாரியங்களினிடையிலும், சந்தோஷ உல்லாச வைபவங்களினிடையிலும் எமது பரிமளத்திரவியங்களே நறுமணங் கமழவேண்டுமென்று விரும்பியே தொன்றுதொட்டு நாங்கள் கொண்டுள்ளமுறை ஒருசிறிதும் வழுவாதுசெய்து, அதிகலாபம் கருதாது யாவரும் முகமலர்ச்சியுடன் ஏற்கத்தக்கதாகவுள்ளன. (கேட்லாக் இனாம்.

| | |
|---|---|
| 1 சந்தனாதித்தைலம் | 10 பரிமள பாக்குத்தூள் |
| 2 அரைக்கீரை விதைத்தைலம் | 11 மிகக்குண பரிமள வில்லைகள் |
| 3 மணமிகுவீசும் பத்திகள் | 12 மணமிகு அரகஜா |
| 4 புனுகு ஜவ்வாதுகள் | 13 சுகந்த சந்தனப்பவுடர் |
| 5 பஞ்சவர்ண பக்குவ கொப்பரைச்சீவல் | 14 பக்குவமான பரிமளச்சுண்ணாம்பு |
| 6 சற்குண ஸ்நானப்பொடி | 15 நற்குண பற்பொடி |
| 7 சந்தன வில்லைகள் | 16 ஈசனுக்குரிய தசாங்கம். |
| 8 சித்தர்விரும்பும் அத்தர் தினுசுகள் | 17 ரோஜாப்பூ குல்கந்து |
| 9 வாசவர்மெச்சும் சேசர் பவுடர் | 18 சரி[illegible] கலவைச்சந்தனம் |

N.B.—நாம் நமது சகோதரர்களுடன் K. தாவூத்சாஹிப் & [illegible] ந் பரிமளச்சாலையின் வியாபாரப்பெருமையை இதுகாறும் மேலோங்க ஒத்[illegible] வந்தோம். தற்சமயம் சகோதரர்கள் ஆணைப்படி நாம் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தொழில் நடத்துகிறோமாதலின், நம்மீது அன்புபூண்டுள்ள ஸ்ரீமான்கள் நமது பரிமளச்சாலையை ஆதரிக்குமாறு விரும்புகின்றோம். தங்களுடையவும், தங்கள் நண்பர்களுடையவும் அன்பார்ந்த ஆர்டரை எதிர்பார்க்கிறோம்.

Printed at the Sri Krishna Vilasa Press and Published by N. Apathsagaya Aiyer, Kumbakonam.